REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 14 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 193 | Wednesday 14, August, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 366 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜூலை 31 முதல் நேற்று முன்தினம் ஆகஸ்ட் 12 வரை 366 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 235 முறைப்பாடுகளும், மாவட்ட 06

## எதிர்வரும் ஜனவரி மாதம் முதல்

# சகல அரச ஊழியருக்கும் பாரிய சம்பள அதிகரிப்பு

## வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மூன்றாண்டுகளுக்கு தலா 25,000 ரூபா

- அடிப்படை சம்பளம் 24-35 வீதம் உயர்த்தப்படும்
- அதன்படி, குறைந்த தர ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் 55,000 ரூபா மற்றும் கொடுப்பனவுகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச சேவையிலுள்ள அனைத்துப் பிரிவுகளிலும் சம்பளத்தை திருத்துவதற்கான யோசனைக்கே, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், 06

## ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஐ.ம.சக்தி MP ராஜித ஆதரவு

### கங்காராமையில் உடன்படிக்கை கைச்சாத்து



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளார்.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று கொழும்பு கங்காராமையில் நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுடன் பல அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நகழ்வில் கலந்துகொண்டனர்.

## நீர்க்கட்டணம்: மேலும் 07 வீதம் குறைப்பதற்கு அரசு தீர்மானம்

### ஜீவனின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீர்க் கட்டணத்தை குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதுடன், சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் நகர தோட்ட குடியிருப்புகள் தவிர்ந்த வீடுகளுக்கான குடிநீர் கட்டணத்தை, ஏழு வீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். 06

## ஜனாதிபதியை ஆதரிக்கும் கட்சிகள் எம்.பிக்கள் இணைந்து புதிய கூட்டணி

### பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமையில் செயற்பாடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் கட்சிகள், எம்பிக்கள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க உள்ளன. இந்நிகழ்வு இன்று காலை பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல்லான்சா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் இப்புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்படவுள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து 06

## 03 ரயில் நிலையங்களுக்கு சூரிய சக்தி மின்சாரம்



### அமைச்சர் பந்துலவின் யோசனைக்கு அனுமதி

## கட்டுப்பணம் செலுத்தல் இன்றுடன் நிறைவு: நாளை வேட்புமனுத் தாக்கல்

### 34 பேர் நேற்று வரை கட்டுப்பணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஜனாதிபதி தேர்தலுக்கு கட்டுப்பணத்தைச் செலுத்தும் நடவடிக்கைகள் இன்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 34 வேட்பாளர்கள் 06

## கடுமையான நிதி ஒழுக்கத்துடன் 2025 ஆண்டுக்கான புதிய பட்ஜட்

### வழிகாட்டல்களுடனான சுற்றறிக்கை வெளியீடு




பொது மக்களின் நிதியை செயல்திறனுடனும் மற்றும் மக்களின் நன்மைக்காகவும் பயன்படுத்தக் கூடிய வகையில், அடுத்த ஆண்டுக்கான (2025) வரவு செலவுத் திட்டம் கடுமையான நிதி ஒழுக்கத்துடன் தயாரிக்கப்படவுள்ளது. இது தொடர்பான 06

## நாளை வேட்புமனு தாக்கல்; நேற்று வரை 36 பேர் கட்டுப்பணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தும் நடவடிக்கைகள் இன்றைய தினம் நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று வரை 36 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

## மன்னாரில் இளம் தாய் மரணம்; நீதி கோரி நேற்று போராட்டம்

**மன்னார் குறூப், தலைமன்னார் நிருபர்கள்**



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த இளம் தாய்க்கு நீதி கோரி, நேற்றுக் காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது. மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றிய 06

## தோட்ட தொழிலாளர்களுக்கும் ‘அஸ்வெசும’ கொடுப்பனவுகள்

### ஒரே வீட்டில் வசிப்போரை தனித்தனியே உள்வாங்க அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக பெருந்தோட்ட பகுதியில் லயன் வீடுகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களையும் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் வேலைத் திட்டத்தில் உள்வாங்குவதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

லயன் வீடுகளில் வசிக்கும் வெவ்வேறு குடும்பங்களை தனித்தனியே, இந்தத் திட்டத்தில் உள்வாங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 06

### செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தினூடாக

## இணையவசதி சேவையை வழங்க "ஸ்டார்லிங்" நிறுவனத்துக்கு அனுமதி

செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணையச் சேவைகளை வழங்குவதற்கு ஸ்டார்லிங்க் தனியார் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானத்தை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எடுத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உலகப் 06




## ஜனாதிபதி தேர்தல்: மக்கள் காங்கிரஸின் முடிவு இன்று



ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் திட்டமிட்டபடி இன்று (14) இறுதித் தீர்மானத்தை கட்சி எடுக்குமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சி உயர்பீடக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, ஜனாதிபதித் தேர்லில் 06

## 2,689 கிலோ பீடி இலைகளுடன் மூன்று இந்திய பிரஜைகள் கைது

### மன்னார், குதிரைமலையில் சம்பவம்



2,689 கிலோ பீடி இலைகளை ஏற்றி வந்த இந்திய dhow ரக வள்ளத்தை கைப்பற்றிய கடற்படையினர், அதில் பயணித்த 03 இந்திய பிரஜைகளையும் கைது செய்துள்ளனர்.

மன்னாருக்கு தெற்கே குதிரைமலை முனைக்கு அப்பால் வடமேற்கு கடற்பகுதியில், 06

## தங்க பிஸ்கட்டுகளுடன் இளம் வர்த்தகர் கைது

### ரூபா. 04 கோடி பெறுமதியென மதிப்பீடு



சட்டவிரோதமான முறையில் 16 தங்க பிஸ்கட்டுகளை கடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்று (13) காலை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவற்றின் இன்றைய 06

## வேட்பாளர் திலித் ஜயவீர கட்டுப்பணம் செலுத்தினார்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள சர்வஜன சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக, திலித் ஜயவீர கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

திலித் ஜயவீர சார்பில் கலாநிதி ஜீ.வீ ரசிங்க நேற்று (13) கட்டுப்பணத்தை செலுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான தொழிற்சங்கத்தின் குழுவினர், இதில் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் 06

# அமைச்சரவை முடிவுகள்

**01. இலங்கை பல்கலைக் கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் கல்வி ஒத்துழைப்பு நோக்கத்துடனான புரிந்துணர்வு / ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்**

இலங்கையின் பல்கலைக்கழகங்களை உலகத் தரப்படுத்தல் சுட்டிகளில் தரமுயர்த்துதல் மற்றும் உயர்கல்வி ஒத்துழைப்புக்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் நாட்டின் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்காகவும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ஹொரண மில்லேவவத்த நகர அபிவிருத்தித்திட்டக் காணியில் முறையற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர் வீடுகளுக்கு இடமாற்ற அடிப்படையில் புதிய வீட்டு அலகுகளை வழங்குதல்**

ஔடத உற்பத்திக் கிராமங்களை நிறுவும் திட்டம் வெலிக்கடை சிறைச்சாலையை இடமாற்றும் திட்டம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான கைத்தொழில் திட்டம் மற்றும் மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் பல்கலைக்கழகக் கிராமத்தை நிறுவும் திட்டம் ஆகிய அபிவிருத்தித் திட்டங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஹொரண மில்லேவவத்த காணியிலிருந்து காணித்துண்டுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கமைய, மில்லேவவத்த காணியில் முன்மொழியப்பட்டுள்ள, அபிவிருத்தித் திட்டங்களுக்கு இடையூறாக அமையும் 54 முறையற்ற வீட்டு அலகுகளை அகற்றி, குறித்த வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு இரண்டு கட்டங்களில் தலா பத்து பேர்ச்சர்ஸ் காணித்துண்டுடன், முழுமையான உரித்துடன், பணத்தை அறவிடாமல் வழங்குவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கை கடலோர வலயம் மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவத் திட்டம் 2024 – 2029இனை நடைமுறைப் படுத்தல்**

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கடலோரப் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையின் கடலோர வலய முகாமைத்துவத்திற்காக கடலோர வலயம் மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த திட்டம் ஐந்து (05) வருடங்களுக்கு ஒருமுறை காலத்தோடு தழுவியதாக மேம்படுத்தப்படல் வேண்டும். குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தொல்லியல் பெறுமதியுடன் கூடிய புத்தளம் அருவாக்காலு மயோசீன சுண்ணாம்புக்கல் படிமத்திற்கு அண்டிய பிரதேசங்களைப் பாதுகாத்தல்**

26 195 இடையிலான மில்லியன் வருடங்கள் மிகவும் பழைமையான யுகத்திற்குச் சொந்தமான தொல்லியல் காரணிகள் அடங்கிய கற்படிமங்கள் புத்தளம் மாவட்டத்தின் வனாத்தவில்லுப் பிரதேச செயலகப் பிரிவின் அருவக்காலு பிரதேசத்தில் காணப்படுகின்றமையை புவிச்சரிதவியல் மற்றும் தொல்லியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




அதற்கமைய, குறித்த பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்லியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்லியல் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 10 ஹெக்ரெயார் பிரதேசத்தை தொல்லியல் ஒதுக்கிடமாக பெயரிடுவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கையின் குடிநீர் துறையில் முதலீடுகளுக்கான தெரிவு செய்கின்ற அளவுகோல் சட்டகம்**

துறைசார் நிபுணர்கள், பங்காள முகவர் நிறுவனங்கள் மற்றும் கல்வியியலாளர்களுடன் கூடிய நடவடிக்கைக் குழுவின் கண்காணிப்பின் கீழ் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சால் குடிநீர் துறையில் முதலீடுகளுக்கான தெரிவு செய்கின்ற அளவுகோல் சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அளவுகோல் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தென்மேல் பருவக்காற்று ஆரம்பித்திருப்பதால் வெள்ளப்பெருக்கு, கடுங்காற்று உள்ளிட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்**

2024.05.15 தொடக்கம் நாட்டில் தென்மேல் பருவக்காற்று மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, கடுங்காற்று உள்ளிட்ட அனர்த்தங்கள் காரணமாக 120,215 குடும்பங்களைச் சேர்ந்த 454,625 பேர் பாதிக்கப்பட்டார்கள்.

172 முழுமையான வீட்டுச் சேதங்களும் 20,075 பகுதியளவிலான வீட்டுச் சேதங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. அதற்கமைய, முழுமையாகச் சேதமடைந்த 172 வீடுகளுக்கும் அதே இடத்தில் அல்லது வேறு பாதுகாப்பான இடத்தில் வீடுகளை அமைத்து வழங்குவதற்கும்.

பகுதியளவில் சேதமடைந்துள்ள 20,075 வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான புகையிரத நிலையங்கள் மற்றும் கட்டிடங்களில் கூரைகளில் சூரிய மின்கலங்களை பொருத்திப் பராமரித்தல்**

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான 300 இற்கும் அதிகமான புகையிரத நிலையங்கள் காணப்படுவதடன், அவற்றின் சூரியசக்தி மூலம் மின்னுற்பத்தியை ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச தனியார் பங்குடமை முறையில் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் 03 ஆம் பகுதிகளில் IR மற்றும் IS ஒப்பந்தத்தொகுதிக்கான ஒப்பந்தம் வழங்கல்**

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் 03 ஆம் பகுதியின் நிர்மாண வேலைகள் 19 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1A தொடக்கம் 1Q வரையான 17 பகுதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய விபரங்களுடன் பதிலளிப்புக்களுடன் கூடிய மாகா இன்ஜினியரிங் (பிறைவெட்) லிமிட்டட் IR மற்றும் IS ஒப்பந்தத் தொகுதிகளை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்று அங்கீகரித்தல்**

இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை இலங்கையின் வர்த்தக, வாணிப உணவுப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தாய்லாந்தின் வர்த்தக அமைச்சர் அவர்களால் 2024.02.03 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. இவ்விடயத்தின் அடிப்படையில் இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சராக ஜனாதிபதியினால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்; டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் (பதனிடல் மற்றும் மீள் ஏற்றுமதிக்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் நறுமணப் பொருட்களை இறக்குமதி செய்தல்)

1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட 2393 /36 ஆம் இலக்க 2024.07.18 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள்**

தற்போது நடைமுறையிலுள்ள ஏற்றுமதி பெறுகைகள் தொடர்பான விதிகள், அதாவது '2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புத் விதிகள் (திருத்தம்)' தளர்த்துமாறு ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் சில அரச முகவரகங்களால் இலங்கை மத்திய வங்கிக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யும் திட்டங்களுக்கு காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வேலைச்சட்டகம்

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 06(1)(இ) பிரிவின் மூலம் கொழும்பு துறைமுக நகர அதிகார எல்லையில் அமைந்துள்ள மற்றும் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அரசின் விற்பனை செய்யக்கூடிய காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதற்கமைய, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 06(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மருத்துவமனை பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு காணித்துண்டுகளைக் குத்தகைக்கு வழங்குவதற்காக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. பின்னவல – கித்துல்கல சுற்றுலா வலய அபிவிருத்தி**

2024 வரவு செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் பின்னவல – கித்துல்கல சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சுக்கு 750 மில்லியன் ரூபாய்கள் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, பின்னவல – கித்துல்கல சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (திருத்த) சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடல் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.05.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. குற்றங்கள் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான சட்டமூலம்**

குற்றங்கள் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள சட்டங்களின் கொள்கைகள், சட்ட ரீதியான வரையறைகள் மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கான வரைபை மேம்படுத்துவதற்கான குழுவின் அறிக்கைக்கமைய குற்றங்கள் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2024.04.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. கலம்பு மரீனா டிவலொப்மென்ட் (பிறைவெட்) லிமிட்டட் இனை மூலோபாய முக்கியத்துவம் கொண்ட ஆரம்பநிலை வர்த்தகமாக பெயரிடல்**

'ஓய்வுத் துறைமுகம்' ;"(MARINA) அபிவிருத்தித் திட்டத்திற்காக பிறவுன்ஸ் இன்வெஸ்மன்ட் தனியார் கம்பனியின் முழுமையான உரித்துடைய கம்பனியான கலம்பு மரீனா (பிறைவெட்) லிமிட்டட் இற்கு கொழும்பு துறைமுக நகரப் பிரதேசத்திலுள்ள நான்கு காணித்துண்டுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. வர்த்தகத்திற்குரிய விடுவிப்புக்கள் மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## களுத்துறை லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு A.N.Gems அனுசரணை





(பேருவளை விசேட நிருபர்)

களுத்துறை மாவட்டத்தில் முன்னணி உதைபந்தாட்ட கழகமான பேருவளை சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க பேருவளை சீனன்கோட்டை ஏ.என். ஜெம்ஸ் (A.N.Gems) களுத்துறை லீக் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான காசோலை கையளிக்கும் நிகழ்வு சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. ஏ.என். ஜெம்ஸ் உரிமையாளர்களான அர்க்கம் அஸ்லம், நபீல் இஸ்மத் ஆகியோர் 500,000.00 ரூபாவுக்கான காசோலையை இதன்போது கழக தலைவர் முஹம்மத் இஹ்ஸாஸ், உபதலைவர் அல்ஹாஜ் அன்ஸார் ஜுனைத், செயலாளர் கிஸான் ஹாசிம், முகாமையாளர் ஸாலி இஸ்மாயில், கழக உப தலைவர் முஹம்மத் முஸாஹில் உட்பட விளையாட்டு வீரர்கள் முன்னிலையில் கையளித்தனர்.

களுத்துறை உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் இச் சுற்றுப்போட்டியில் 16 முன்னணி விளையாட்டு கழகங்கள் பங்கு பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஏ,பி இரு குழுக்களாக சுற்றுப்போட்டியில் அணிகள் மோதுகின்றன.

கடந்த 03.08.2024 இல் களுத்துறை வேர்னன் பெர்ணாந்து விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது போட்டியில் சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகமும் பெந்தொட்டை விளையாட்டுக் கழகமும் மோதியபோது சன்ரைஸ் அணி 9–0 என்ற கோள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சுற்று போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளன. ஏ குழுவில் எட்டு அணிகள் பங்குபற்றுவதோடு 7 போட்டிகள் நடைபெறும்.

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடாத்திய

## மாகாண மட்ட முஸ்லிம் கலாசாரப் போட்டிகளில் அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு 11 முதலிடங்கள்

வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பாராட்டு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டிகளை முன்னிட்டு, கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடாத்திய, மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டிகளில் அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்கு 11 முதலிடங்கள் கிடைத்துள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் தெரிவித்தார்.

முதலிடங்களைப் பெற்றுக் கொண்ட போட்டி நிகழ்வுகள், அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளன.

இதுகுறித்த விபரங்களை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். குலேந்திரகுமார் பத்தரமுல்ல கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார். அக்கரைப்பற்று கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் மொத்தம் 11 முதலிடங்களை பெற்றுக் கொள்வதற்கு அவர்களைத் தயார்படுத்தி, வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றார்கள்,



ஆசிரியர் ஆலோசகர் (இஸ்லாம்) மௌலவி என்.ரி.நஸீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் (இஸ்லாம்) மௌலவி ஏ.ஆர்.ஏ.மனாப், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) எம்.எம்.சித்தி பாத்திமா ஆகியோருக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் நன்றி, பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வெற்றி மாணவர்களின் பெயர் மற்றும் பாடசாலை விபரம் வருமாறு, பாட்டு ஐ.சப்றா இஸ்ஸத், தரம்10, பாயிஸா மகா வித்தியாலயம், அ.பற்று, பாட்டு எஸ்.நிஸ்மா, தரம்13, ஆயிஸா முஸ்லிம் பெண்கள் கல், அ.பற்று, அதான் ஏ.எல்.எம்.ஹம்தான், தரம்13, மின்ஹாஜ் மகா வித்தி, பாலமுனை. அஸ்மாஉல் ஹுஸ்னா எம்.எப்.இஹ்திசாமா, தரம்13, அஸ்ஸிராஜ் ம.வி, அ.பற்று. அறபு எழுத்தணி – ஆர்.சிப்னா, தரம் 13, அக்கரைப்பற்று மு. மத்திய கல்லூரி. அறபுதமிழ் இலக்கியம் ஏ.பாத்திமா திப்றான், தரம்11, பாயிஸா மகா வித்தி, அ.பற்று.

அறபுதமிழ் இலக்கியம் பி.எல். எப்.வசீக்கா, தரம்13, அ.பற்று மு.ம. கல்லூரி.

கஸீதா தரம்07, 08 மாணவர் குழு, பாயிஸா மகா வித்தியாலயம், அ.பற்று.

கஸீதா தரம்10, 11 மாணவர் குழு, அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயம், அ.பற்று.

கஸீதா தரம்13 மாணவர் குழு, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி.

றபான் நடனம் தரம்12, 13 மாணவர் குழு, அக்கரைப்பற்று மு.ம. கல்லூரி.



'இனிய நந்தவனம்' இலங்கை வட மாகாண சிறப்பிதழை கொழும்பு ரவி ஜுவல்லர்ஸ் உரிமையாளர் மகேஷ்வரனுக்கு இலங்கை வந்துள்ள இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன் வழங்கி வைத்தபோது எடுக்கப்பட்ட படம்

## புத்தளம் பிரதேச செயலகத்தில் இரத்த தான முகாம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (13) காலை இரத்த தான முகாமொன்று இடம்பெற்றது. ரம்ய லங்கா நிறுவனம், ஜமாஅத்தே இஸ்லாமி, புத்தளம் பிரதேச செயலகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இந்த இரத்ததான நிகழ்வு பிரதேச செயலாளர் சம்பத் வீரசேகர தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதேச செயலக பிரதிப் பணிப்பாளர், பஹன மீடியா நிறுவனத்தின் பணிப்பாளர். அஷ்ஷெய்க் முஜீப் ஸாலிஹ், ரம்யா லங்கா நிறைவேற்று அதிகாரி டி.எம். அலி சப்ரி,



மருத்துவ அதிகாரி வைஸ்னவன் பத்மநாதன், பொது சுகாதார பரிசோதகர் ஜே. ஏ.டி நுவன் ஜயசிங்க, சிலாபம் மற்றும் புத்தளம் பிரதேசங்களுக்கான இரத்த வங்கியின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நாளாந்த சம்பள அதிகரிப்பால் உற்பத்திகள் அதிகரிக்க வாய்ப்பு

## தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பள அதிகரிப்பு மூலம் உற்பத்தியை அதிகரிக்க பெருந்தோட்டக் கம்பனிகள் எதிர்பார்த்துள்ளதாக, தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

சம்பளக் கட்டுப்பாட்டுச்சபை, தோட்ட முதலாளிமார் சங்கம், பெருந்தோட்ட மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்து தொழில் அமைச்சின் செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் (12) நடத்திய கலந்துரையாடலில் எட்டப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில், பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,350 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதாக ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த சம்பளத்திற்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி செலுத்தப்படுவதுடன், மேலதிகமாக பறிக்கப்படும் (18 தொடக்கம் 20 கிலோ) தேயிலை கொழுந்துக்கும் 50 ரூபா கொடுப்பனவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். பெருந்தோட்ட கம்பனிகள் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில், நாட்டில் தேயிலை தொழில் துறையை தொடர்ந்து முன்னெடுக்கும் நோக்கில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 25 வீதத்தால் அதிகரிக்க இணக்கம் தெரிவித்ததாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வினைத்திறனுடன் செயற்படும் பட்சத்தில், மேலதிகமாக தேயிலை கொழுந்து பறிப்பதனூடாக நாளாந்தம் கூடுதலான வருமானம் ஈட்ட முடியும் எனவும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை சுட்டிக்காட்டியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் வழக்கில், புதிய சம்பள அதிகரிப்பு தொடர்பில் இரு தரப்பினரும் செய்துகொண்ட இந்த இணக்கப்பாடு குறித்த விடங்களை நீதிமன்றத்தில் முன்வைத்த பின்னர், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் வழங்கப்படுமென அவர் மேலும் கூறினார்.

# அமைச்சர் அலி சப்ரி கடமையை பொறுப்பேற்பு



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று நீதி அமைச்சில் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டபோது.

# முட்டை விலைகளில் வீழ்ச்சி

முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதையடுத்து,விலைகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தெரிவித்த வர்த்தகர்கள்,முட்டை உற்பத்தி மற்றும் இறக்குமதிகளால் முட்டைகளின் விலைகள் வீழ்ச்சியுறத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்தனர். எதிர்கால பண்டிகை காலங்களை கருத்திற்கொண்டு முட்டைகளின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் நிலையங்களுக்கு சூரிய சக்தி மின்சாரம் அமைச்சர் பந்துலவின் யோசனைக்கு அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் கட்டடங்களுக்கு சூரிய சக்தி மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ரயில் நிலையங்கள் மற்றும் கட்டடங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை பொருத்தி, சூரியசக்தி மூலமான மின்னுற்பத்தி செயற் திட்டத்தை ஆரம்பிப்பதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அரச மற்றும் தனியார் துறை இணைந்ததாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இங்கு அது தொடர்பில் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன;

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான 300 க்கும் அதிகமான ரயில் நிலையங்கள் நாட்டில் உள்ளன. அவற்றிற்கு சூரியசக்தி மின்னுற்பத்தியை ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானதென இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச தனியார் இணைந்த வகையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பலஸ்தீனுக்கு இ.தொ.கா ஆதரவு



சேவைக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பும் பலஸ்தீன தூதுவருடன் பேச்சு நடத்திய அமைச்சர் ஜீவன் தொண்டமான்,பலஸ்தீனுக்கான ஆதரவையும் தெரிவித்தார். நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சில் இச்சந்திப்பு (12) நடைபெற்றது.

இரு நாடுகளையும் பிணைக்கும் வலுவான வரலாற்று மற்றும் கலாசார உறவுகளை இவ்விருவரும் இச்சந்திப்பில் வலியுறுத்தினர்.

அத்தோடு பாலஸ்தீன மக்கள் மீதான அமைச்சரின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கும் வகையில், தூதுவர் டாக்டர். சுஹிட், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு பாலஸ்தீன கெஃபியை பரிசாக வழங்கினார்.

பாலஸ்தீன மக்கள் பாரிய இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகியுள்ள இக்காலத்தில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சாதாரண இலங்கையர்கள் எவ்வாறு பாலஸ்தீன மக்களின் நலனுக்காகப் பங்களிக்க முன்வந்துள்ளனர் என்பதைத் தூதுவர் இதயப்பூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

06



கொழும்பு பொது நூலக இரண்டாம் மாடி விஷேட உசாத்துணை பகுதியில் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ்ஜா நேற்று முன்தினம் (12) மாலை'' பாரத் கோஷ் '' இந்திய நூலகத்தை திறந்து வைத்தார். அருகில் இந்திய கலாசார நிலையத்தின் பணிப்பாளர், கலாநிதி அங்குரன் டத்தா அருகில் நிற்பதையும் நூல்களை இந்திய தூதுவர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# 'மித்ரசக்தி' கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்க இந்திய படையினர் வருகை



இலங்கை, இந்தியாவிடையே பரஸ்பர நட்புறவை மென்மேலும் விருத்தி செய்யும் முக்கிய படிமுறையாக, வருடந்தோறும் ஏற்பாடு செய்யப்படும் மித்ரசக்தி போர் பயிற்சி இம்முறையும் ஏற்பாடாகியுள்ளது.மாதுரு ஓயா பிரதேசத்தில் இம்மாதம் 12 முதல் 25 வரை நடத்துவதற்குத் எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் இந்திய இராணுவ வீரர்கள் நேற்றுமுன்தினம் (12) மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தனர். இந்திய இராணுவ படையினரை காலாட் படை பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர வெலகெதர, மித்ர சக்தி இராணுவ பயிற்சி பணிப்பாளர் மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம, இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இவர்களை வரவேற்றனர்.

இப்போர் பயிற்சியில் இந்திய இராணுவத்தை பிரநிதித்துவப்படுத்தி கேணல் ரவீந்திர அலவட் தலைமையில் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் இலங்கை இராணுவத்தை பிரநிதித்துவப் படுத்தி கஜபா படையணியின் 18 அதிகாரிகளும் 102 சிப்பாய்களும் பங்கேற்கவுள்ளனர்.

10 வது தடவையாக இம்முறை இடம்பெறும் இந்த இராணுவப் பயிற்சிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இலங்கையிலும் இந்தியாவிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

இரு நாடுகளுக்கிடையே அனுபவப்பகிர்வு மற்றும் நட்புறவு மூலம் பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் பூரண மேற்பார்வையில் இந்த இராணுவப் பயிற்சி நடைபெறுகிறது.

# இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேக்கர மீண்டும் SLPP இல் இணைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர மீண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் தமது தீர்மானத்தை வெளியிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அவர் ஏற்கனவே தமது இணக்கத்தை தெரிவித்திருந்தார்.இந்நிலையிலே, மீண்டும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுடன் இணைந்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் கருத்துத் தெரிவித்த அவர்; பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்சியிலிருந்து வேட்பாளர் ஒருவரை நியமித்துள்ளது.இதனாலேயே, மீண்டும் கட்சியுடன் இணைந்து கொள்ள தாம் தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விஜித் விஜயமுனி சொய்சா ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



கட்டான ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான விஜித் விஜயமுனி த சொய்சா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி க்கு உழைக்க முன்வந்துள்ளார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை (12) பிற்பகல் சந்தித்த விஜித் விஜயமுனி த சொய்சா, ஜனாதிபதிக்கு தனது ஆதரவை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அரசியல் செய்வதற்கு நாடொன்று இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையின் காரணமாகவே இன்று நாடு முன்னோக்கிச் செல்வதாகவும், அந்த வேலைத் திட்டத்தின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

06

# நதீரா மடுகல்லவின் தாயார் காலமானார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற விவகார ஊடகப் பணிப்பாளர் நதீரா மடுகல்லவின் தாயார் விமலா மடுகல்ல 83 ஆவது வயதில் காலமானார்.

இல. 593/2, III, பிடிபன டவுன், ஹோமாகம என்ற முகவரியில் அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் நாளை (15) பி.ப 4.00 மணியளவில் ஹோமாகம பொது மயானத்தில் நடைபெறும்.

ஓய்வுபெற்ற இராணுவ கேப்டன் டி.எம்.எச். மடுகல்லவின் மனைவியான திருமதி விமலா மடுகல்ல, செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் மறைந்த கேர்ணல் சுதத் மடுகல்ல மற்றும் திருமதி நதீரா மடுகல்ல ஆகியோரின் தாயாருமாவார்.

# முதுகலைப்பட்டம்:மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

நாடளாவிய ரீதியில் முதுகலைப்பட்டதாரி நிறுவனங்களில் கடந்த நான்கு வருடங்களில் மாணவர்களின் எண்ணிக்கை, கணிசமாகக் குறைந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான முதுகலைப் பட்டதாரி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான நிறுவனத்தில் 2021 இல் முதுநிலை கற்கை நெறிக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1096 ஆக இருந்ததாகவும், 2022 இல் அது 889 ஆகக் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிறுவனத்தில் கடந்த ஆண்டு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை ஐந்நூற்று எழுபது என்று தெரிவித்த பேராசிரியர், இந்த ஆண்டு இதுவரை பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 281 என்றும் கூறினார். இதற்கமைவாக பேராதனை பல்கலைக்கழகத்தின் மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞான பிரிவில் முதுகலைப் பட்டதாரிகளுக்கு பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை, சுமார் 74 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி, பட்டப் படிப்புகளுக்குச் செலவு செய்யப் பணமின்மை, பிற முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்காக மாணவர்கள் வெளிநாடு செல்வது, நாட்டின் வரி விதிப்பு போன்றவை முதுகலை நிறுவனங்களில் மாணவர் பதிவு குறைவதற்கு முக்கியக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், துணைவேந்தர்களும் முதுகலைப் படிப்பிற்கான மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அந்த முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை என்றும் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டார்.


# பொது அறிவித்தல்

**மில்க்போர்ட் டெவலொபர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (PV 6539) மற்றும் மில்க்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட் (PV 11531) எனும் நிறுவனங்களை கூட்டிணைக்கும் அறிவித்தல்**

மில்க்போர்ட் டெவலொபர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மில்க்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட் எனும் நிறுவனங்களின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த இரு நிறுவனங்களையும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 242(1) அத்தியாயத்தின் பிரகாரம் கூட்டிணைத்து இனிமேல் மில்க்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட் எனும் பெயரில் தனி நிறுவனமாக நடாத்திக்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த கூட்டிணைத்தல் நிறுவன பதிவாளர் நாயகத்தினால் அனுமதி அளிக்கப்படும் நாள் முதல் அமுலுக்கு வரவுள்ளது.

**பணிப்பாளர்கள்**
**மில்க்போர்ட் டெவலொபர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**மில்க்போர்ட் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

நல்ல நடத்தையினால் உயர்வு ஏற்படும்; இல்லையேல் இழிவான பழி வந்து சேரும்.

## ஜனாதிபதித் தேர்தல் மீது மக்களுக்கு அதிக கரிசனை

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் வேகமடைந்துள்ள சூழலில், இத்தேர்தல் குறித்து மக்களும் கூடுதல் கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இற்றைவரை 34 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இன்று நண்பகலுடன் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவடைய உள்ளதோடு, நாளை வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

இந்நிலையில் இத்தேர்தலுக்கான பிரசாரங்களை ஒவ்வொரு கட்சியும் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து வெவ்வேறு இடங்களில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவிருக்கின்றன.

கடந்த காலங்களைப் போலல்லாது இத்தேர்தல் குறித்து கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் மாத்திரமல்லாமல் பொதுமக்களும் கூட அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனைப் பரவலாக அவதானிக்க முடிகிறது.

ஏனென்றால், 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்தது. அந்தப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியாத சூழலில், 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஆட்சி பொறுப்பை ஏற்று இருந்தவர் பதவியை விட்டு வெளியேறினார். அந்த நேரத்தில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை எடுப்பதற்கு 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றவரும் தவிர்ந்து கொண்டார். இந்தச் சூழலில் மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டிருந்தனர். பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த துரதிர்ஷ்டகரமான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து துணிந்து தீர்மானங்களை எடுத்தார். அவர் பாராளுமன்றத்திற்கு தேசியப் பட்டியல் மூலம் வந்தவர் என்பதை மறந்துவிடலாகாது. நாட்டின் தலைமையை ஏற்றதும் அவர், பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் வங்குரோத்து நிலையில் இருந்தும் நாட்டை மீட்டெடுப்பதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கத் தொடங்கின.

அன்று இலங்கை முகம்கொடுத்தது போன்ற பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான பல நாடுகள் மீட்சி பெறவென பல வருடங்கள் எடுத்துக் கொண்டன. ஆனால் ஜனாதிபதி பதவியேற்றது முதல் ஆரம்பித்த பொருளாதாரத் திட்டங்கள் அளித்துவரும் பிரதிபலன்கள் உலகின் ஏனைய நாடுகளுக்கும் முன்னுதாரணமானவையாக அமைந்துள்ளன. இந்நாட்டின் பாராளுமன்ற அரசியலில் அவர் பெற்றுள்ள பரந்த அனுபவமும் அறிவும் இந்நாட்டை பாரிய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து குருகிய காலப்பகுதிக்குள் மீட்டெடுக்க வழிவகுத்தது.

2022 ஆம் ஆரம்பப்பகுதியில் நாடு எதிர்கொண்டது போன்ற பொருளாதார வீழ்ச்சிக்கு மீண்டும் நாடு உள்ளாகி விடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். அக்காலப்பகுதியில் முகம் கொடுத்த நெருக்கடிகளும் பாதிப்புக்களும் அவர்களது மனங்களை விட்டு இன்னும் அகன்று விடவில்லை. குறிப்பாக எரிபொருள், எரிவாயு அடங்கலான அனைத்துப் பொருட்களதும் விலைகளும் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டன. வரிசையுகம் தலைதூக்கி இருந்தது. பணவீக்கம் உச்சத்தைத் தொட்டிருந்தது. இத்தகைய இக்கட்டான நிலைக்கு 2019 ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறே காரணமென பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர்.

நாட்டின் செயற்பாட்டு அரசியல் குறித்த அனுபவம் இல்லாத ஒருவரை நாட்டின் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்ததன் விளைவாகவே இத்தகைய பொருளாதார நெருக்கடிக்கு நாடும் மக்களும் முகம் கொடுக்க நேர்ந்தது.

தற்போது பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் வங்குரோத்து நிலையில் இருந்தும் நாடு மீட்சி பெற்று முன்னேற்றப் பாதையில் பயணிக்கின்றது. இதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு முகம்கொடுத்தது போன்ற பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு பொருளாதாரத்தை வலுவானதாகவும் ஸ்திரமானதாகவும் கட்டியெழுப்ப வேண்டும். இதன் நிமித்தம் பொருளாதார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக தூரநோக்கின் அடிப்படையில் செயற்பட வேண்டியது மக்கள் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# ரெலோ, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் ஜனாதிபதியுடன் நேரில் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ் ஈழ விடுதலை இயக்கம்( ரெலோ) மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் 12 ஆம் திகதி நடைபெற்றது. ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இச்சந்திப்பில் தாங்கள் கலந்து கொண்டதாக இக்கட்சிகள் தெரிவித்தன.



ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் வேந்தன், செயலாளர் துளசி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்கிய சூழலிலே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக பொதுக்கட்டமைப்பின் உறுப்பினர்களை சந்திப்பதற்கான அழைப்பினை தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொதுஅமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் இந்த அழைப்புக்கு மதிப்பளித்து சந்திப்பில் கலந்து கொண்டன. தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், ஜனாதிபதி ரணில் தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்காக முன்னெடுக்க உள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இச்சந்திப்பில் பங்கேற்பதென அவர்கள் முடிவு செய்திருந்தனர்.

பிரதானமாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு கோரிக்கை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஜனாதிபதி தரப்பில் சமஸ்டி முறையான அரசியல் தீர்வு என்பது பலம் மிக்க பாராளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது சம்பந்தமாக பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப் பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும், அதற்காக தன்னிடம் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளடங்கிய ஆவணம் ஒன்றையும் சமர்ப்பித்தார். ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் எனக்கும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம், உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும் ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கு முகமான மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தமது தரப்பிலும் தயாராக இருப்பதாகக் கூறிய தமிழ்த் தரப்பினர், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து கருத்து தெரிவிப்பதாக கூறினர்.

**கு. சுரேந்திரன்...**
பேச்சாளர், ரெலோ

# 'இனிய நந்தவனம்' சஞ்சிகை வடமாகாண சிறப்பிதழ் விசுவமடுவில் வெளியீடு

'இனிய நந்தவனம்' வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு விசுவமடுவில் நடைபெற்றது. 'வன்னியின் தகுதிமிக்க பதிவுகளும் சான்றுகளும் இந்தச் சிற்றிதழில் அடங்கியிருக்கின்றமை சிறப்புக் குரியது' என்று நூல் நயப்புரை நிகழ்த்திய எழுத்தாளர் வன்னிமகள் எஸ்.கே. சஞ்சிகா தெரிவித்தார்.

25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற 'இனிய நந்தவனம்' சிற்றிதழின் வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு விழா கடந்த 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விசுவமடு மத்திய சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா தலைமை வகித்தார்.



சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தி.செந்தில் வேலவர், வவுனியா தமிழ் விருட்சம் தொண்டமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னதாக விருந்தினர்களும் பங்கேற்பாளர்களும் விசுவமடு மத்திய சனசமூக நிலைய திறன் விருத்தி மாணவர்களின் அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டனர். கேட்போர் கூடத்தில் ஆரம்பமான நிகழ்வுகளை அறிவிப்பாளர் சிலைவேந்தன் தொகுத்தளித்தார்.

சுடர் ஏற்றுதல், அகவணக்கம் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து இளைய கவிஞர் திரியாயூரான் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமை உரையினை அதிபர் கம்பீரக்குரலோன் சி.நாகேந்திரராசா நிகழ்த்தினார். 'இனிய நந்தவனம் காலத்தின் பணி ஒன்றினை ஆற்றி இருக்கின்றது. ஏனெனில் வன்னி மண்ணின் காலத்து அடையாளங்கள் பல இந்தச் சிற்றிதழ் மூலம் கொண்டுவரப்பட்டிருக்கின்றன' என அவர் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அறிமுக உரையினை யோ.புரட்சி நிகழ்த்தினார். வடமாகாண சிறப்பிதழை ஒழுங்கமைப்பதில் படைப்பாளர்கள் நல்கிய ஆதரவு மற்றும் இதனை பூரணப்படுத்துவதில் ஏற்பட்ட சிரமங்களை எடுத்துக் கூறிய அவர், இதற்காக ஒத்துழைத்த ஒவ்வொருவரையும் நினைவு கூர்ந்தார்.

வாழ்த்துரையை விசுவமடு மத்தி சனசமூக நிலைய திறன் விருத்தி அலகு இணைப்பாளர் ரயூலா திருச்செல்வன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பிதழ் வெளியீடு இடம்பெற்றது. இனிய நந்தவனம் வடமாகாண சிறப்பிதழை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் வெளியிட்டு வைக்க, புத்தளம் அறிவிருட்சம் துரித கல்வி சமூக மேம்பாடு நிறுவன தலைவர் ஐ.எம் சுரைஸ் முதற்பிரதியினை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து விருந்தினர்களும் பங்கேற்பாளர்களும் இதழைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வின் கல்விசார் அறப்பணியாக இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் வன்னியின் பொருளாதார நெருக்கடி மிக்க முன்பள்ளி ஒன்றின் கல்விச் செயற்பாட்டுக்காக இருபத்து ஐயாயிரம் ரூபா நிதி வழங்கி வைத்தார்.

இனிய நந்தவனம் இதழின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஆசிரியர் தி.செந்தில்வேலவர், புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரின் தொடரான இலக்கியப் பணியினை பாராட்டி தமிழ் விருட்சம் தொண்டமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மதிப்பளித்து நினைவுச் சின்னம் வழங்கி வைத்தார்.

சிறப்பிதழ் பணிகளை ஒழுங்கமைத்த யோ.புரட்சி, வன்னி மகள் எஸ்.கே.சஞ்சிகா, ரயயூலா திருச்செல்வன், சி.நாகேந்திரராசா, திரியாயூரான், சிலைவேந்தன், சந்திரகுமார் கண்ணன், யாழ் பாவாணன் ஆகியோருக்கு இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நினைவுச் சின்னங்கள் வழங்கி மதிப்பளித்தார்.

மருத்துவர் வட்டக்கச்சி ஜெயராஜா அவர்களுக்கும், சிறுவர் நூல்களை அதிகம் ஆக்கிய புத்தளம் ஸாஹிரா தேசிய கல்லூரி ஆசிரியர் முல்லை றிசானா அவர்களுக்கும் நிகழ்வில் மதிப்பளிப்பு வழங்கப்பட்டது.

நூல் நயப்புரையினை வன்னிமகள் எஸ்.கே.ஞ்சிகா நிகழ்த்தினார். சிறப்புரையினை தினகரன்/ வாரமஞ்சரியின் ஆசிரியர் தி.செந்தில் வேலவர் நிகழ்த்தினார். இனிய நந்தவனம் சிற்றிதழ் இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் தனது பணியை கொண்டு செல்வது தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமான இலக்கியத் தொடர்பின் முக்கிய அங்கம் என அவர் குறிப்பிட்டார்.

ஏற்புரையினை இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்த்தினார். சிற்றிதழ் ஒன்றினை கொண்டு வருவதில் எவ்வளவு இடர்பாடுகள் இருந்த பொழுதும், 25 ஆண்டுகள் கடந்தும் நந்தவனம் பயணிப்பது வாசகர்களின் ஒத்துழைப்பினால் ஆகும் என அவர் குறிப்பிட்டார்.

நன்றியுரையை யாழ் பாவாணன் வெளியீட்டக இயக்குனரும் இனிய நந்தவனம் இலங்கை இணைப்பாளருமான யாழ்பாவாணன் நிகழ்த்தினார்.

படைப்பாளர்கள், இலக்கிய விரும்பிகள் என தகுதிமிக்க நிறைந்த அவையோடு இனிய நந்தவனம் வடமாகாண சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு நடந்தேறியது.

# யாழ் ஒஸ்மானியா கல்லூரியின் முதலாவது அதிபர் ஸி.எம்.ஏ.ஜிப்ரி

## அன்னாரின் நூற்றாண்டு தினம் 20 ஆம் திகதி



யாழ்ப்பாணம், சோனகத் தெருவில் காதர் முஹிதீன், தாஹா பீவி தம்பதியருக்கு 1924 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி அஹமெட் ஜிப்ரி பிறந்தார். எதிர்வரும் 20 ஆம் திகதி அவரது நூற்றாண்டு தினமாகும். அஹமெட் ஜிப்ரி தனது ஆரம்பக் கல்வியை யாழ்.மன்பஉல் உலூம் பாடசாலையில் கற்றார். அதன் பின்னர் யாழ். இந்துக் கல்லூரியில் கற்று உயர்கல்வியில் சித்தியடைந்தார்.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும், பணிப்பாளராகவும் அவர் சேவையாற்றினார். அவர் பட்டதாரி ஆவார்.

உயர்கல்வியில் சித்தியடைந்த அஹமெட் ஜிப்ரி 1946_ 1947 இல் ஆங்கில ஆசிரியராக பயிற்சி பெற்றார். அவர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக புத்தளம் ஸாஹிரா கல்லூரியில் 1948 இல் முதல் நியமனம் பெற்றார். அவர் யாழ்ப்பாணம் சோனகத்தெருவைச் சேர்ந்த முஹம்மது முஹிதீன் ஸகீனா தம்பதியினரின் மகளான தூபாவை திருமணம் செய்தார்.

அவர் வித்தியாலங்கரா பல்கலைக்கழகத்தில் கற்று 1961 இல் பட்டதாரியானார். 1963 இல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்கு முதலாவது அதிபராக நியமனம் பெற்றார். அவர் ஒஸ்மானியா கல்லூரியில் சுமார் ஒரு வருடம் அதிபராக கடமையாற்றினார்.

புத்தளம் ஸாஹிரா கல்லூரியிலும் (1956 – 1958 ), யாழ் ஒஸ்மானியா கல்லூரியிலும் (1963), நாவலப்பிட்டி சென்மேறீஸ் கல்லூரியிலும் (1970) அதிபராக கடமையாற்றியுள்ளார்.

1949 முதல் 1978 வரை அளுத்கம ஸாஹிரா கல்லூரி, யாழ் வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி, கொழும்பு ஸாஹிரா கல்லூரி, கொழும்பு இசுபத்தான கல்லூரி, யாழ் ஒஸ்மானியா கல்லூரி, கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனிய்யா கல்லூரி, நாவலப்பிட்டி சென்மேறீஸ் குமார கல்லூரி, இஸ்லாமிய்யா கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும், உபஅதிபராகவும் கடமையாற்றினார். அவர் 19.08.1978 இல் சேவையிலிருந்து இளைப்பாறினார்.

அஹமெட் ஜிப்ரி பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலா பீடத்திலும், கல்லேலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியிலும் பணிப்பாளராக ஒரு வருடமும் கொழும்பு இக்ரஹ் சர்வதேச பாடசாலையிலும் கடமையாற்றினார். அவர் முஸ்லிம் புலமைப் பரிசில் நிதியத்தில் ஓர் அங்கத்தவராகவும் சேவையாற்றினார். அவர் தனது 83 ஆவது வயதில் காலமானார்.

**கலாபூஷணம் பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்.

# ஷேக் ஹசீனா மீது கொலை வழக்கு!



பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டத்தின் போது பொலிசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மளிகைக்கடைக்காரர் அபு சயீத் என்பவரும் கொல்லப்பட்டார். இது தொடர்பாக அப்போதைய பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட 6 பேர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் இடஒதுக்கீடுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் பல இடங்களில் வன்முறை வெடித்தது. இதில் மாணவர்கள், பொலிசார், பொதுமக்கள் என 500 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஜுலை 19 அன்று டாக்காவின் முகமதுபூர் பகுதியில் பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மளிகைக்கடை உரிமையாளர் அபு சயீத் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக அதே பகுதியைச் சேர்ந்த அமிர் ஹம்சா ஷாடில் என்பவர் டாக்கா பெருநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதில் அபு சயீத் கொல்லப்பட்டதற்கு ஷேக் ஹசீனா உள்ளிட்ட 6 பேர்தான் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி ராஜேஷ் சவுத்ரி முன் விசாரணைக்கு வர உள்ளது. ஷேக் ஹசீனா உள்ளிட்ட 6 பேர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வங்கதேச பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்த நிலையில், பதியப்பட்ட முதல் வழக்கு இதுவாகும்.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com

# அமானா வங்கிக்கு, இலங்கையின் சிறந்த இஸ்லாமிய வங்கிக்கான கௌரவம்

நாட்டில் காணப்படும் வட்டி சாராத வங்கிச் சேவைகளுக்கான முன்னோடியாகத் திகழும் அமானா வங்கிக்கு, இலங்கையின் சிறந்த இஸ்லாமிய வங்கிக்கான கௌரவம் பெருமைக்குரிய Euromoney இஸ்லாமிய நிதியியல் விருதுகள் வழங்கலில் வழங்கப்பட்டிருந்தது. Euromoney இனால் வெளிப்படுத்தப்பட்டதற்கமைய, இந்த கௌரவிப்பினூடாக அமானா வங்கியின் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் மக்களுக்கு நட்பான வங்கியியலுக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு ஆகியன வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

Euromoney இஸ்லாமிய நிதியியல் விருதுகள் என்பது, Euromoney இன் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விருதுக் கட்டமைப்பின் அங்கமாக அமைந்திருப்பதுடன், முன்னைய 12 மாத காலப் பகுதியில் சிறந்த வினைத்திறனை காண்பித்திருந்த வட்டிசாராத நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையிலும், தமது சந்தைகளில் அந்நிறுவனங்கள் எய்தியிருந்த தாக்கங்களை கௌரவிக்கும் வகையிலும் அமைந்திருந்ததுடன், சந்தையில் வட்டிசாராத வங்கியியல் மற்றும் நிதியியல் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியிருந்தமையை கௌரவிப்பதாகவும் அமைந்திருந்தது. Euromoney இன் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆய்வு அணியினரால் இந்த விருதுகளுக்கு மத்தியஸ்தம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில், அமானா வங்கி சிறந்த நிதிப் பெறுபேறுகளை எய்தியிருந்தது. குறிப்பாக வரிக்கு பிந்திய இலாபம் 76% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 1.4 பில்லியனை எய்தியிருந்ததுடன், மூலதன இருப்பு ரூ. 20 பில்லியனாக உயர்ந்திருந்தது. புதிய முதலீட்டுடன், வங்கி துரித வளர்ச்சிக்கு முகங்கொடுத்திருந்ததுடன், காணப்படும் வாய்ப்புகளை கையகப்படுத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

விருது தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "வட்டிசாராத வங்கியியல் முறைமையில் அமானா வங்கியின் தலைமைத்துவத்தை மீண்டும் உறுதி செய்து, சர்வதேச கௌரவிப்பை பெற்றுக் கொள்வதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க மக்களுக்கு நட்பான வங்கிச் சேவைகளை ஊக்குவிப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாகவும், எமது வாடிக்கையாளர்களின் வளர்ச்சிக்கு வலுவூட்டி, வளமூட்டுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாகவும் இந்த விருது அமைந்துள்ளது." என்றார்.

## யூனியன் அஷ்யூரன்ஸ் வருடாந்த விருதுகள் 2023



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது பங்காளர் விநியோக வருடாந்த விருதுகள் 2023 நிகழ்வை அண்மையில் மொனார்க் இம்பீரியலில் முன்னெடுத்தது.

பாங்கசூரன்ஸ் மற்றும் கூட்டாண்மை பிரிவு அங்கத்தவர்களின் சிறந்த பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வை முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் நிறைவேற்று குழுவிலிருந்து சுரேஷ் ராஜேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைபவத்தின் பிரதான விருதுகளை வெற்றியீட்டியவர்களில், கொமர்ஷல் வங்கி பிரிவைச் சேர்ந்த சோபித நகுலேஸ்வர, "பாங்கசூரன்ஸ் சம்பியன் ஒஃப் சம்பியன்ஸ்" விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிப் பிரிவைச் சேர்ந்த ஹர்ஷ விஜேசிங்க, "சிறந்த காப்புறுதி உறவு பேண் அதிகாரி" எனும் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிப் பிரிவின் மத்திய பிராந்தியம் மற்றும் கொமர்ஷல் வங்கி பிரிவின் கொழும்பு வடக்கு பிராந்தியம் ஆகியன "சிறந்த பிராந்தியம்" விருதை வென்றன.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிப் பிரிவின் கொழும்பு வடக்கு மற்றும் கொழும்பு உப பிராந்தியங்களை உள்ளடக்கிய மேல் 1 பிராந்தியம் மற்றும் கொமர்ஷல் வங்கிப் பிரிவின் கொழும்பு வடக்கு, கொழும்பு உள்ளக பகுதிகள் மற்றும் வடமேல் பகுதிகளை கொண்ட வலயம் C ஆகியன "சிறந்த வலயம்" விருதை வென்றன. "கூட்டாண்மை பிரிவின் சம்பியன்" விருதை பிரனீத் விமலசிறி பெற்றுக் கொண்டார்.

வைபவத்தின் போது யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "பங்காண்மை விநியோக பிரிவின் உறுதியான செயற்பாட்டை கௌரவித்து, எமது பங்காளர்கள் மற்றும் அணி அங்கத்தவர்களின் சிறந்த பங்களிப்புகளை கொண்டாடுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். பரிபூரண, ஓரிடத்தில் சகல நிதிப் பாதுகாப்பு தீர்வுகளையும் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் எமது இலக்குகளை எய்துவதில் அவர்களின் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது" என்றார்.

## கொமர்ஷல் வங்கி ESG க்கான இலங்கையின் சிறந்த வங்கி'யாக யூரோமனியால் அங்கீகாரம்



சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) திட்டப்பணிக்கான வங்கியின் அர்ப்பணிப்புக்காக சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தி வரும் யூரோமனி விருதுகள் நிகழ்வில் (Euromoney Awards for Excellence) இலங்கையின் கொமர்ஷல் வங்கி 2024 ஆம் ஆண்டில் 'ESG க்கான இலங்கையின் சிறந்த வங்கி'ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கியின் கிளை வலையமைப்பு முழுவதும் ESG திட்டப்பணியின் சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் வங்கியால் செயல்படுத்தப்பட்ட பல உள்ளக மற்றும் வெளியக முயற்சிகள் மற்றும் செயல்முறைகளினை அங்கீகரிக்கிறது.

ஆற்றல்திறனுள்ள செயல்பாடுகள் ஊடாக சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல், அதன் கார்பன் தடத்தைக் குறைத்தல் மற்றும் பசுமையான எதிர்காலத்தை ஆதரிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு நிதியளித்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி நிதியியல் உள்ளடக்கம் பாலின சமத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டங்களை ஆதரிப்பதன் மூலம் சமூக நிலைப் பேற்றினை தீவிரமாக ஊக்குவிக்கிறது.

உதாரணமாக வங்கியின் மகளிர் வங்கி முயற்சியானது பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தேவையான நிதியியல் கருவிகள், வளங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை வலுப்படுத்துகிறது. மேலதிகமாக இலக்கிடப்பட்ட சமூக திட்டங்கள் மற்றும் பங்குடைமை மூலம் பின்தங்கிய சமூகங்களை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன்செயற்படுவதாக வங்கி தெரிவித்துள்ளது.

## வருடாந்த IT Gallery Partner Summit 2024 மாநாட்டில் சிறந்த HIKSEMI பங்களிப்பாளர்கள் கௌரவிப்பு



2018 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்று வரும் வருடாந்த IT Gallery Partner Summit மாநாடானது, தொழில்துறையில் புத்தாக்கம் மற்றும் தொடர்புகளை மேம்படுத்துவதில் இடம்பெறும் முக்கிய நிகழ்வாக காணப்படுகின்றது. இவ் வருடம் தமது கூட்டாண்மையைக் கொண்டாடும் வகையில் இலங்கையிலுள்ள HIKSEMI முகவர்களை பாராட்டி கௌரவிக்கும் HIKSEMI Sri Lanka Dealer Appreciation Conference 2024 மாநாட்டை அறிமுகப்படுத்துவதில் IT Gallery பெருமிதம் கொள்கிறது. 4 வருடங்களுக்கு முன்னர் HIKSEMI வர்த்தக நாமத்தை தமது சேமிப்பக தீர்வுகள் மற்றும் தயாரிப்புகளின் பிரதான விநியோகஸ்தராக IT Gallery Computer (Pvt) Ltd இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருந்தது.

2023 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ITG மற்றும் HIKSEMI வணிகத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய முதலிடத்திலுள்ள மூன்று பங்குதாரர்களை கௌரவிக்கும் நோக்கில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. விநியோகஸ்தர் வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் ஒரு வாய்ப்பை இது ஏற்படுத்தியது. இந்த நிகழ்வில் PCIe 4.0 NVMe SSD Future Pro and Future Lite, Future DDR5, Gaming Solution, Surveillance SSD V300X, HighSpeed Micro SD NEO LUX, Professional Camera, SD Portable E Sd Portable, NVMe SSD Elite series மற்றும் SSD USB Ultra உள்ளிட்ட பல்வேறு புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

தெற்காசிய HIKSEMI விற்பனை முகாமையாளர் பிரையன் இங்கு தெரிவிக்கையில், "இந்த பிரத்தியேக நிகழ்வில் எமது முக்கியமான மூன்று பங்குதாரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளை கொண்டாடுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். அவர்களது முக்கிய பங்களிப்புகள் இலங்கையில் ITG – HIKSEMI இடையேயான வணிகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்த நிகழ்வு வெறுமனே ஒரு கௌரவிப்பு மாத்திரம் அல்லாது, வலுவான தொடர்புகளை உருவாக்குவதற்கும், புதிய தொடர்புகளை ஒன்றிணைந்து ஆராய்கின்றதுமான ஒரு நிகழ்வுமாகும்." என்றார்.

## புதிய Baling தளத்தில் முதலீடு செய்வதன் மூலம் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பை துரிதப்படுத்தும் Hemas Consumer Brands

வேகமாக நுகரப்படும் பாவனையாளர் பொருட்கள் துறையில் முன்னோடியாக விளங்கும் சுற்றாடல் நிலைபேறான தன்மையில் ஆர்வமுள்ள Hemas Consumer Brands, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான, மாசடைவுகள் அற்ற நாளைய தினத்திற்காக பிளாஸ்டிக் வெளியீட்டை குறைப்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்துகின்றது.

2030ஆம் ஆண்டளவில் 100% முழுமையான பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சியை அடைவதற்கான தனது பயணத்தில், இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான Eco Spindles (Pvt) Ltd. உடன் ஒரு முக்கிய பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ள Hemas Consumer Brands நிறுவனம், காலியில் Baling தளத்தில் முதலீடு செய்கிறது. இது எதிர்வரும் 3 வருடங்களுக்குள் 360,000 கிலோகிராம் (360 மெட்ரிக் தொன்) பிளாஸ்டிக்கை சேகரிக்கும் இலக்கைக் கொண்டுள்ளது. பொறுப்பு வாய்ந்த நுகர்வு நடைமுறைகள், சூழலைப் பாதுகாத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் Hemas குழுமத்தின் 2030 ஆம் ஆண்டை நோக்கிய சூழல் தொடர்பான நிகழ்ச்சி நிரலுக்கமைய, சமூகம், சூழல், ஆளுகை (ESG) சார்ந்த பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் Hemas Consumer Brands முன்னணியில் இருந்து வருகின்றது.

பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பதற்கான புதிய திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த Hemas Consumer Brands சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷியான் ஜயவீர, "நிலைபேறாண்மையை ஆழமாக கவனத்தில் கொண்ட ஒரு நிறுவனம் எனும் வகையில், சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி முயற்சிகள் மூலம், பிளாஸ்டிக் பொதிகளை சூழலிலிருந்து விரைவாகக் குறைப்பதற்கான வழிகளை நாம் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகிறோம். அந்த வகையில் இலங்கையின் மிகப்பெரும் மீள்சுழற்சி பங்குதாரரான Eco Spindles (Pvt) Ltd நிறுவனத்துடன் இணைந்து ஒரு Baling தளத்தை நிறுவுவதன் மூலம் காலியில் பாரிய அளவிலான பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். பொதியிடல்களை சேகரித்து மீள்சுழற்சி செய்வதற்கான மீள்சுழற்சி கட்டமைப்பில் முதலீடு செய்வதற்கான எமது ஆர்வமானது, எமது தயாரிப்புகளின் பொதியிடல்களின் சூழல் தாக்கத்தைத் குறைப்பதற்கும் நிலைபேறான தன்மைக்கான எமது அர்ப்பணிப்பை நிரூபிப்பதையும் எடுத்துக் காட்டுகிறது," என்றார்.



## இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகள் அன்பளிப்பு

Terumo Corporation அதன் விநியோக பங்காளரான ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் இணைந்து, Nissei DS11 குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகளை இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளது. புத்தாக்கமான மருத்துவ தீர்வுகளினூடாக, சமூகங்களுக்கு வலுவூட்டல் மற்றும் இருதய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை இந்த நடவடிக்கை எடுத்துக்காட்டியுள்ளது. புகழ்பெற்ற இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர். டானியா பெரேராவினால் இந்தத் திட்டம் வழிநடத்தப்பட்டதுடன், இலங்கையில் இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகவும் அமைந்துள்ளது. Nissei DS11 குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரம், குருதி அழுத்த கண்காணிப்பு தொழில்நுட்பத்தில் முன்னோடியாக திகழ்கிறது.



இலங்கையின் பிரபல டைல்ஸ் உற்பத்தி நிறுவனமான Macktiles Lanka வின்புதிய காட்சியறை அண்மையில் பேருவளையில் திறந்துவைக்கப்பட்டது.நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சிமர் மில்பர் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பிரமுகர்கள் சகிதம் காட்சியறையை திறந்து வைத்தார்.

## கொழும்பில் 'Colour Next-2024' வெளியிட்ட Asian Paints Causeway

இலங்கையின் மிகப்பெரிய நிறப்பூச்சு உற்பத்தியாளர்களில் ஒன்றான Asian Paints Causeway, கொழும்பில் இடம்பெற்ற மாபெரும் நிகழ்வில் 'Colour Next – 2024' இனை அறிமுகப்படுத்தியது.

'Color Next' என்பது கட்டடக்கலை, கலை, உள்ளக வடிவடிமைப்பு, பேஷன், சமூகவியல், ஊடகம், நுகர்வுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு ஆக்கபூர்வமான துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுடன் இணைந்து, Asian Paints இனால் தொகுக்கப்பட்ட வர்ணங்கள், மூலப்பொருள், கட்டமைப்புகள், நிறைவு நிலைகள், நிறப்பூச்சுகள் ஆகியவற்றின் வடிவமைப்பு பாதைக்கான பரந்துபட்ட வருடாந்த எதிர்கால தோற்றப்பாடுகளின் வெளியீடாகும்.

நிறம் மற்றும் பொருட்களின் எதிர்கால முன்னறிவிப்பில் தெற்காசியாவின் முதன்மையான மற்றும் தனித்துவமான நுண்ணறிவு அறிக்கையாக 'Color Next' கொண்டாடப்படுகிறது. 'Color Next – 2024' இன் அறிமுகமானது, இலங்கையில் 'Color Next' இன் முதலாவது பதிப்பாக விளங்குகிறது.



APIPL (International) பிராந்தியத் தலைவர் சிரீஷ் ராவ் போன்றவர்களுடன், கட்டடக் கலைஞர்கள் மற்றும் உள்ளக வடிவமைப்பாளர்களுடன், Asian Paints Causeway விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் (இலங்கை) பொது முகாமையாளர் வைத்திலிங்கம் கிரிதரன், சந்தைப்படுத்தல் தலைவர் (இலங்கை) அநுராத எதிரிசிங்க உள்ளிட்ட Asian Paints Causeway சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அதிதிகள் குழுவினரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பார்வைக்கு பிரமிக்க வைக்கும் மற்றும் கலாசார ரீதியாக வெளிப்பாட்டை ஏற்படுத்தும் இடங்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி APIPL International பிரதம நிர்வாகி பிரக்யான் குமார் தனது விசேட உரையில் கருத்து வெளியிட்டார்.

இங்கு தெரிவித்த அவர், "வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர் எப்போதும் பிரமிக்க வைக்கின்றதும், கலாசார ரீதியாக வெளிப்பாட்டை வழங்கும் தோற்றத்தை ஏற்படுத்தும் வண்ண மயமான இடங்களை உருவாக்குவதை விரும்புகிறார்கள். " என்றார்.

ஜூலை 22இல், சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டதால்

# ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது

நாட்டில் 2022 ஜூலையில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்ட பாடுபட்டதால், செப்டம்பர் 21இல்,புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளதாக

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பு உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தி நாட்டில் சுதந்திரமான தேர்தலுக்கு ஒத்துழைப்பது ஜனாதிபதி என்ற வகையில் தனதும் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகிய தரப்பினரதும் பொறுப்பு எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர விசேட அதிரடிப் படை நடவடிக்கை மையத்தைத்



திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (13) கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். செப்டம்பர் 21 இல்,ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின்னர் நாட்டில் எந்த வகையிலும் வன்முறைகளுக்கும் இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, அது தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டார். ஸ்ரீஜயவர்தனபுர விசேட நடவடிக்கை மையத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் கௌரவமாக வரவேற்கப்பட்டார். பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து, விசேட அதிரடிப் படைக் கட்டளை நடவடிக்கை மையத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, படையினரின் வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தற்போதைய தளபதி, பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுப் பரிசில் ஒன்றை வழங்கினார்.

இந்த கட்டளை மையம் பொது ஒழுங்கு முகாமைத்துவம் மற்றும் மோட்டார் சைக்கிள் குழுவில் பிரதான மையமாக செயல்படும்.

பயங்கரவாத மற்றும் வன்முறை, தீவிரவாத தாக்குதல்கள், வன்முறை ஏற்படுத்தும் எதிர்ப்புகள், பணயக் கைதிகள் தொடர்பான விடயங்கள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் உட்பட பல்வேறு அவசர நிலைகளை கையாளும் பொறுப்பு இந்தப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில்...

தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 120 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும், ஏனைய விடயங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## நாளை வேட்புமனு தாக்கல்;...

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட 19 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் மற்றும் ஒரு அரசியல் கட்சியும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது.அதேவேளை,16 சுயேட்சை வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி தேர்தல்: மக்கள்...

யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் கருத்துகளைப் பெற்றுள்ளோம். பெறப்பட்ட கருத்துகளை இன்று உயர் பீடக் கூட்டத்தில் முன்வைத்து ஒரு தீர்மானத்துக்கு வரவுள்ளோம். இன்று மாலை 4.00 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ள உயர் பீடக் கூட்டத்தில் எடுக்கும் தீர்மானம் உடன் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வேட்பாளர் திலித் ஜயவீர...

ஆகஸ்ட் (04) நடைபெற்ற கூட்டமைப்பின் மாநாட்டின் போது 'சர்வஜன சக்தி' கட்சியின் செயற்குழு உறுப்பினர் எம்.பி விமல் வீரவன்ச திலித் ஜயவீரவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார். இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பணம் செலுத்தல் இன்றுடன்...

நேற்று மதியம் வரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரசியல் கட்சிகள் சார்பாக 17 பேரும், சுயேட்சை வேட்பாளர்கள் 15 பேருமே இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

சர்வ ஜனசக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர சார்பில் நேற்று கட்டுப் பணம் செலுத்தப்பட்டது. இவரது சார்பில் கலாநிதி ஜி வீரசிங்க கட்டுப்பணத்தை செலுத்தினார்.

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி நுவன் போபகேயும் நேற்றைய தினம் கட்டுப் பணம் செலுத்தியுள்ளார்.

## 2,689 கிலோ பீடி இலைகளுடன்...

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இந்தியப் பிரஜைகள் மூவர் வள்ளத்துடன் கைதாகினர். இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பீடி இலை மூடைகளை வள்ளத்துடன் படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர். கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில், கடற்படையினர், நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடற்பரப்புகளை உள்ளடக்கி ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

## தோட்ட தொழிலாளர்களுக்கும்...

பெருந்தோட்டத்துறையில் தோட்டங்களில் தனி வீடுகள் இல்லாதிருப்பதால், தோட்டத் தொழிலாளர்கள் கூட்டாக ஒரே லயன் வீடுகளில் வசிக்கின்றனர். தற்போதைய நடைமுறைக்கமைய வெவ்வேறான குடும்ப எண்ணிக்கைகளைக் கருத்திற் கொள்ளாமல், லயன் அறைகளில் வாழ்கின்ற அனைத்து நபர்களும் ஒரே குடும்ப அலகாக கருதப்படுகின்றனர். இது அந்தக் குடும்பங்களுக்கு பாதகமானது என்பது உணரப்பட்டுள்ளது. இந்நிலையில் 2022 ஆண்டின் 01 இலக்க நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு கட்டளைகளின் பிரகாரம், அஸ்வெசும முன்மொழிவுத் திட்டத்திற்கு தகைமைகளை நிர்ணயிக்கும் போது லயன் வீடுகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, செயலாற்றுமாறு நலன்புரி நன்மைகள் சபைக்கு உத்தரவிடுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இணையவசதி சேவையை வழங்க...

புகழ்பெற்ற வர்த்தகர் எலான் மஸ்க்குக்குமிடையிலான சந்திப்பு அண்மையில் இந்தோனேசியாவில் நடைபெற்றது. எலான் மஸ்க்குக்குச் சொந்தமான ஸ்டார்லிங்க் வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இதன் விளைவாக, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் மூலம் இலங்கையில் இணைய வசதி சேவைகளை வழங்க ஸ்டார்லிங்க் (Starlink) நிறுவனத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள கண்ணாடி இழை (பைபர்) தொழிநுட்ப இணைய சேவையை விட, இந்த இணைய சேவை, பல மடங்கு வேகமானது.

உலகில் எந்த இடத்திலிருந்தும் இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும். இதனால் எதிர்காலத்தில் இலங்கையின் தொழில்நுட்பத் துறையில், சிறந்த சூழல் உருவாகும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## தங்க பிஸ்கட்டுகளுடன்...

நிலவரப்படி நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியென தெரிவிக்கப்பட்டுள்ளது. காலியில் வசிக்கும் 28 வயதுடைய வர்த்தகரான இவர் அடிக்கடி வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

இர் நேற்றுக் காலை 06.05 மணியளவில் டுபாயிலிருந்து UL226 சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்த தங்க பிஸ்கட்டுகள் 08 வீதம் 02 பொதிகளாக, மறைத்துவைக்கப்பட்டு, அவற்றை அவர் உடலில் சுமந்து சென்ற பக்க பையில் பொருத்தி, விமான நிலையத்துக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

தற்போது, இந்த வர்த்தகர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக ளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றன.

## ஜனாதிபதியை ஆதரிக்கும் கட்சிகள்...

இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை இணைத்து இந்த பரந்த கூட்டணி கட்டியெழுப்பப்படும். இந்த கூட்டணி அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் ஒற்றுமை, சகோதரத்துவம், நீதி மற்றும் ஜனநாயகம் கொண்ட விரிவான மக்கள் மேடையாக முன்னணி மாறும். ஏராளமான தொழிற்சங்கங்கள், சார்பு அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளும் இந்த கூட்டணியில் இணையவுள்ளன.

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேம்ஜயந்த, ஜகத் புஸ்பகுமார, அனுர பிரியதர்ஷன யாப்பா, நளின் பெர்னாண்டோ, ஜோன் செனவிரத்ன, பிரியங்கர ஜயரத்ன, நிமல் லான்சா, சாமர சம்பத் தசநாயக்க, உதயகாந்த குணதிலக்க, சுதத் மஞ்சுள, நாலக கோட்டேகொட, எஸ்.எம். எம். முஷாரப், இஷாக் ரஹ்மான், எஸ்.வியாழேந்திரன், நசீர் அஹமட், மொஹமட் முஸ்ஸம்மில், அலி சப்ரி ரஹீம், உதயன கிரிந்திகொட ஆகியோருடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், உட்பட பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மன்னாரில் இளம் தாய் மரணம்...

தலைவர் வி.எஸ். சிவகரன் ஏற்பாடு செய்த இந்த போராட்டத்தில், நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புத் துணியால் தமது வாயை கட்டி, கையில் கறுப்புக் கொடியை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் (28) சிகிச்சைக்காக வருகை தந்த இளம் தாய், நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக உயிரிழந்தார்.

அவரது மரணம் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்த போதும்,

இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## நீர்க்கட்டணம்: மேலும் 07 வீதம்...

நீர்க் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 4.5 வீதமும் சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் நகர்ப்புற தோட்ட வீடுகள் தவிர்ந்த வீட்டு அலகுகளுக்கு 7 வீதமும் பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு 6.3 வீதமும் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்படும் என்றும் பொதுவாக நூற்றுக்கு 5. 94 வீத கட்டணக் குறைப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மூலமான தற்போதைய நீர்க்கட்டணம் கடந்த 2023 ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த கட்டணத்தை மீளாய்வு செய்வதற்காக கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஜூலை 15 இல், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜூலை 16 முதல் மின்சார சபை மூலம் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதையடுத்து எரிபொருள், இரசாயனப் பொருட்கள், வட்டிக் கிரயம் ஆகிய செலவுகள் குறைவடைந்துள்ளன.இதைக் கவனத்திற் கொண்டு நீர் கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அனைத்து அரச ஊழியருக்கும்...

இதன்படி, அரச சேவையின் ஆகக் குறைந்த ஆரம்ப மாதாந்தச் சம்பளத்தை ஆகக்குறைந்தது 24 வீதத்தால் அதிகரித்து வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுடன் மொத்தச் சம்பளத்தை 55,000 ரூபா வரை அதிகரித்து, ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளத்தை அதற்கேற்புடைய வகையில், சீர் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்த அவர், அரச சேவையில் சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய பணிக்கொடைகளை மீளாய்வு செய்து, அரச சேவையிலுள்ள அனைத்துப் பிரிவுகளிலும் சம்பளத்தை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவு 2025 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. மேற்படி விதந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக நிபுணத்துவக் குழுவொன்றை நியமிப்பதற்கு, மே 27 இல், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்னவின் தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச துறையின் பிரதான தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடியுள்ளது.

அந்த விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன்பின்னர் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு கொள்கை ரீதியாக அங்கீகாரம் வழங்குவதற்கும், குறித்த முன்மொழிவுகளை 2025 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கி, அமுல்படுத்துவதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, ஒட்டுமொத்த அரச சேவையிலுள்ள அனைத்துப் பதவிகளையும் நான்கு பிரதான மட்டங்களின் கீழ் வகைப்படுத்தி, ஒவ்வொரு மட்டத்துக்கும் இலங்கைத் தராதர வழிகாட்டல் (Sri Lanka Qualification Framework ) மற்றும் தேசிய தொழில் நிபுணத்துவம் (National Vocational Qualification ) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிய தொழிலின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் விசேட தொழில்களுக்கான நிபுணத்துவத்துமுடைய ஊழியர்களை கவர்ந்திழுப்பதற்கும், தொழில்களைத் தக்கவைத்தலைக் கருத்திற்கொண்டு ஆட்சேர்ப்புத் தகைமைகளை வகைப்படுத்தவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பநிலை சேவைகளுக்கு ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளாக இலங்கை தராதர வழிகாட்டல், தேசிய தொழில் நிபுணத்துவத்தின் அடிப்படையில் சேவையின் தேவைகளுக்கேற்ப பொருத்தமான முறையமையைப் பின்பற்றுதல்.

ஏனைய அனைத்துச் சேவை பிரிவுகளுக்கும் முறைமைப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை முறை மூலமாக மட்டும் ஆட்சேர்ப்புச் செய்தல் என்பன அந்த அமைச்சரவை தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தகைமைக்கு ஏற்புடைய வகையில் தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை துரிதமாகத் திருத்தம் செய்தல் மற்றும் 2025 வருடத்தை அடிப்படை ஆண்டாகக் கருதி வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சீராக்கல்கள் மற்றும் இதுவரை சேர்க்கப்பட்டுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளையும் ஒருங்கிணைத்து அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்யும் அடிப்படையில்) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக மாதாந்தம் 25,000 ரூபாவை வழங்குவதற்கும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரச சேவையின் ஆகக் குறைந்த ஆரம்ப மாதாந்தச் சம்பளத்தை, ஆகக் குறைந்தது 24 வீதத்தால் அதிகரித்து வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுடன் மொத்தச் சம்பளமாக ரூபா 55,000வரை அதிகரித்து ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளத்தை அதற்கேற்புடைய வகையில் சீராக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச வர்த்தகக் கம்பனிகள் வங்கிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இப்புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையை நடைமுறைப்படுத்தல், 2030 ஆம் ஆண்டாகும் போது அரச சேவையில் ஒட்டுமொத்த பணியாளர்களை பத்து இலட்சமாகவோ அல்லது அதற்குக் குறைவான மட்டத்திற்கு மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பவையும் யோசனையில் முன் வைக்கப்பட்டுள்ளன .

இதற்கமைய, 2025 மூன்று ஆண்டுகளுக்குள் ஒட்டுமொத்த அரச சேவையை இயன்றவளவுக்கு டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் தன்னியக்க முறை மூலமான இலத்திரனியல் கட்டமைப்பு ரீதியான அரச நிர்வாக முறைமையை அறிமுகப்படுத்தல் மற்றும் அதற்கான அரச முதலீடுகளுக்கு முன்னுரிமை வழங்க ப்படவுள்ளன.

அரச துறையிலுள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களுக்கு ஆகக் குறைந்தது 1,000 ரூபா மாதாந்த பங்களிப்புடன், மிகக் கவர்ச்சிகரமான நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையில்,ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மருத்துவக் காப்புறுதி முறைமையை 2025 ஜனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இயன்றவரை வெளியகச் சேவைகள் போன்ற முறைமைகள் மூலம் அரச செலவுகளை குறைக்கும் வகையில் உயர் வினைத்திறனான வகையில் நியம முறைமைகளைப் பின்பற்றி சேவைகளைப் பெறுதல், இனங்காணப்பட்ட திணைக்களங்கள் , கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபை நிறுவனங்களை பங்குச் சந்தையில் அட்டவணைப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாக மாற்றுவதற்கான மீள்கட்டமைப்பு செயற்திட்டத்தை அமுல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த அரச துறை ஆளணியினர் மற்றும் சேவைகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வை மேற்கொள்வதற்காக 2025 ஆண்டில் நடவடிக்கை எடுத்தல்,

அதற்கமைய அனைத்து அரச ஊழியர்களுக்கும் செயலாற்றுகை சுட்டிகளை தயாரித்து, அவற்றின் முன்னேற்றத்தின் அடிப்படையில் சம்பள உயர்வை வழங்கல், 2020 ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றுள்ள அரச ஊழியர்களுக்கு உரித்தான சம்பள உயர்வை வழங்கி, அவர்களுடைய ஓய்வூதிய சம்பளத்தை திருத்தம் செய்து ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல்,

ஓய்வூதியக்காரர்களுக்கான வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுகள், தற்போது சேவையிலுள்ள அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 50 வீதத்திற்குச் சமமான வகையில் 2025 ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போது காணப்படும் வரிக் கொள்கையில் இச்செலவுகளை முகாமைத்துவப்படுத்தி, இச் சம்பள முறைமையை நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள சம்பள முறைமையை 2025 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அரச நிதி நிலைமைகளையும் கருத்தில் கொண்டு கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

(14.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் தடைபடலாம். கூட்டுத் தொழில் வியாபாரம் சுமாராக நடைபெறும்.

**ரிஷபம் :**
உத்தியோகத்தர்கள் திறமையுடன் முக்கிய பணி ஒன்றை செய்து உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் ஏற்படும் புதிய திருப்பம் மகிழ்வளிக்கும். ஒரு சிலருக்கு புதிய உயர்வு, ஊதிய உயர்வும் கிடைக்கும்.

**கடகம்:**
சக பணியாளர்களிடம் சுமூகமாக நடந்து கொள்ளாவிட்டால் வீண் பிரச்சனைகள் ஏற்படும். சொந்தத் தொழில் லாபகரமாக நடைபெறும்.

**சிம்மம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலையில் புது திருப்பம் ஏற்படும். சிலருக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் முன்னேற்றமான திருப்பம் காணப்படும். அலுவலகத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக பணியாளர்களிடமும் உயர் அதிகாரிகளிடமும் சுமூகமாக நடந்து கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:**
முக்கிய செயல்களை தள்ளி வைப்பது நல்லது. உத்தியோகத்தர்களில் சிலருக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த பதவி உயர்வும் இடமாற்றமும் கிடைக்கும்.

**தனுசு:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. செய்யும் பணிகளில் தவறுகள் நேரலாம். கவனம் தேவை.

**மகரம்:**
உத்தியோகத்தர்கள் வேலைகளில் மிகவும் கவனமாக பணியாற்ற வேண்டும். உயர் அதிகாரிகளிடம் பேசும் போது வாக்குவாதம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**கும்பம்:**
சொந்தத் தொழிலில் வேலை பளு அதிகரிக்கும். அதே நேரம் வருமானமும் தள்ளி போகலாம். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்.

**மீனம்:**
கடன் பிரச்சினைகளில் கவனமுடன் நடந்துகொள்ளுங்கள். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் விருப்பப்படி ஒரு முக்கிய காரியத்தை முயற்சியுடன் செய்து முடிப்பீர்கள்.

## விஜித் விஜயமுனி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, தமது கட்சி உறுப்பினர்களின் ஆசியுடன் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பலஸ்தீனுக்கு இ.தொ.கா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தனது ஒரு தசாப்தகால இராஜதந்திர சேவையில் இலங்கை மக்களுடன் அவர் கட்டியெழுப்பிய வலுவான தொடர்புகள் மற்றும் பிணைப்புகள் காரணமாக, இலங்கையை விட்டு வெளியேறுவதில் அவர் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் சிரமங்களை பாலஸ்தீன தூதுவர் எடுத்துரைத்தார்.பாலஸ்தீன பிரச்சினைக்கு இலங்கை மக்கள் அளித்த ஆதரவிற்கும் ஒற்றுமைக்கும் தூதுவர் பாராட்டு தெரிவித்தார்.

## கடுமையான நிதி ஒழுக்கத்துடன்...

வழிகாட்டுதல்களுடன் கூடிய சுற்றறிக்கையை நிதி அமைச்சு தற்போது வெளியிட்டுள்ளது. நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன கையொப்பமிட்ட இந்த சுற்றறிக்கை நேற்று முன்தினம் (12) அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட ரீதியான நிறுவனங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரச நிதியை திறமையாகவும், ஊழலின்றியும் நிர்வகிப்பதற்கான ஆலோசனைகள் இந்த நிதி ஒழுக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும்.

அடுத்தாண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதில், "20252027" ஆண்டின் நடுத்தர கால நோக்குக்கு ஏற்ப, தங்கள் நிறுவனங்களின் முன்மொழிவுகளை நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு, செயலாளர் நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

2024 இல 44 எனும் அரச நிதி முகாமைத்துவ சட்டம் 2024 (PFM சட்டம்) மற்றும் 20252027 நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு (MTFF) 20252027 ஆகியவற்றிற்கு இணைந்ததாக வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2025 வரவு செலவுத் திட்டம் நிதி ஒழுக்கம் மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில் தயாரிக்கப்படுவதோடு, இதன் மூலம் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பணத்திற்கான மதிப்பை உறுதி செய்வதற்குமாக அரச நிதிகள் மூலோபாய ரீதியாக பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த சுற்றறிக்கையின் நோக்கம், செலவு மதிப்பீடுகளை தயாரிப்பதில் நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலை வழங்குவதாகும்.

2022 இல் உச்சத்தை அடைந்த ஆழமான மற்றும் முன்னேப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு விரிவான மற்றும் நன்கு ஒருங்கிணைந்த நுண் பொருளாதார சீர்திருத்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

# ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான தடையை சட்டரீதியாக எதிர்கொள்ளத் தயார்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



ஆசிரியர் உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையிட்டால் மீள பெறப்பட்டால் மட்டுமே திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெற வாய்ப்புள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலையிட்டால் ஆசிரிய உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவு மீள பெறப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தை நாடி தடை உத்தரவு பெற்றது இது இரண்டாவது முறையாகும்.

வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு சமூகமும் தமது கல்விக்காக பல்வேறு சலுகைகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களை பெற்றிருக்கின்றன. பதியுதீன் மஹ்மூத் கல்வி அமைச்சராகவிருந்தபோது எட்டாம் தரத்தில் சித்தியடைந்த முஸ்லிம்களுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுத்தார்.

அதேபோல சௌமியமூர்த்தி தொண்டமான் சாதாரண தர தகைமையுடன் ஆசிரியர் நியமனங்களை பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு சமூக நலனின் அடிப்படையில் கடந்த காலங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சகோதர சமூகங்கள் புரிந்துணர்வின் அடிப்படையில் இவற்றை நோக்க வேண்டும்.

எவ்வாறாயினும் பெருந்தோட்ட பிரதேச ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பதாரிகளுக்கு உதவும் நோக்கத்தில் நாம் சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம். மலையகத்தை சார்ந்த சட்ட வல்லுநர்கள் ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பத்தாரிகளின் நலன் கருதி உதவ வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கூறுவது போல எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையீட்டில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். அல்லது நாம் இந்த விடயத்தை சட்டரீதியாக எதிர்கொள்வதற்கு தயாரிப்புகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

## மலைச்சாரல்



# ஹல்துமுல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு பாதுகாப்பு மதில் நிர்மாணம்



(ஊவா சுழற்சி நிருபர்)

ஹல்துமுல்லை நீட்வூட் 40 ஏக்கர் காணியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தின் பாதுகாப்பு மதில் கடந்த காலங்களில் பெய்த அடை மழையினால் மண்சரிவுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

# மாத்தளை மாவட்ட காதி நீதிமன்ற நீதிபதியாக நியாஸ் நியமனம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)



நீதிச்சேவை ஆணைக்குழுவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாத்தளை மாவட்ட காதி நீதிமன்றத்தின் நீதிபதியாக எப்.எம்.நியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கெலிஓய தவுலகல வீதி இலக்கம் 4/7 என்ற முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் காதி நீதிமன்ற நடவடிக்கைகள் வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை காலை 8:30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை நடைபெறவுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 0779682512 என்ற கையடக்க தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.

# சமூகவலைத்தளத்தை பயன்படுத்தி மாணவர்கள் புரிந்த ஒழுக்கக்கேடு

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் சேவையாற்றி வந்த இளம் நடன ஆசிரியரின் முகத்துக்கு நிர்வாண புகைப்படத்தை இணைத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் இரண்டு மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் மாத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு வருடப்பயிற்சிக்காக பொல்கொல்ல மகாவலி கல்வி பீடத்திலிருந்து பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட நடன ஆசிரியரின் புகைப்படமே இவ்வாறு சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஆசிரியர் மாத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து அதே பாடசாலையை சேர்ந்த தரம் 10 இல் கல்வி பயிலும் 14 வயதுடைய இரு மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவர்களை மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாய நிலங்கள் மகாவலி வலயத்துடன் இணைப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

உடவளவ நீர்த்தேக்கத்தால் விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் பலாங்கொடை, கல்தோட்டை ,வெலிபொதயாய ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின் 157 கிராம சேவகர் பிரிவுகளை மகாவலி வலயத்துடன் இணைப்பதற்கு இரத்தினபுரி மாவட்ட இணைப்பு குழு கூட்டம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்மூலம் 37500 ஹெக்டயர் விவசாய நிலப்பரப்பு மகாவலி வலயத்துடன் இணைக்கப்படுவதாக பிரதேசசெயலக செயலாளர் தெரிவித்தார்.

# கண்டியில் வர்த்தக கட்டடங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய ஆளுநர் நடவடிக்கை





(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி மத்திய சந்தை உட்பட மற்றும் நகர எல்லைக்குட்பட்ட வர்த்தக கட்டடங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதுதொடர்பில் மத்தியமாகாண ஆளுநர் லலித் யூ கமகே சம்பந்தப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கண்டி மத்திய சந்தை, புகையிரத நிலைய வீதி, வர்த்தகத்தொகுதி, டெலிகொம், பார்க் பொது சந்தைக் கட்டடம், மெனிக்கும்புற சந்தைக் கட்டடங்கள், டொரிங்டன் சந்தைக் கட்டடம் என்பவற்றின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

வர்த்தக நிலைய கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான மதிப்பீட்டு முறைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

இவை தொடர்பாக இரண்டு வார காலத்தில் தீர்வு பெற்றுத் தரப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. சமிலா அத்தபத்து, ஆளுநரின் உதவிச் செயலாளர் உதார கொன்சிவத்த, மாநகர ஆணையாளர் திருமதி. இந்திகா அபேசிங்க உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# ரயில் மோதி ஒருவர் பலி

பிலிமத்தலாவ மற்றும் பெனிதெனிய புகையிரத நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (11) இரவு இடம்பெற்றுள்ளது .

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவர் 35 வயது மதிக்கத்தக்க 06 அடி உயரம் கொண்ட ஊதா நிற காற்சட்டை மற்றும் சாம்பல் நிற சட்டை அணிந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் பேராதனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் இளம் தாயின் மரணத்துக்கு நீதி கோரி வைத்தியசாலை முன்பாக மக்கள் போராட்டம்

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த இளம் தாய்க்கு நீதிகோரி நேற்றைய தினம் காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் ஏற்பாடு செய்த இப்போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருப்பு துணியால் தமது வாயை கட்டி கையில் கருப்புக் கொடியை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக வருகை தந்த நிலையில் நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக உயிரிழந்த இளம் தாயின் மரணம் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் நடைபெற்ற போதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படியொரு கொலை இனி நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(தலைமன்னார் விஷேட நிருபர்)



இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒருதொகை கேரள கஞ்சா யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் வைத்து இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 156 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதன் பெறுமதி சுமார் 42 மில்லியன் ரூபா என பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

## வடக்கின் உதயம்

### மடு. அன்னையின் ஆவணி திருவிழா

# பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் யாத்திரை மல்லாவி நட்டாங்கண்டலை வந்தடைந்தது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

மடுமாத ஆலயத்தின் ஆவணி திருவிழா நாளை 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் இன, மத பேதமின்றி மடு திருத்தலம் நோக்கிய பக்தர்களின் நடைபயணம் நேற்று முன்தினம் (12) பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பகுதியைச் சென்றுடைந்தது.

மடு அன்னையின் திருவிழாவை முன்னிட்டு, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடக்கின் பல பாகங்களிலிருந்தும் நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள், இவ்வாறு நடை பயணத்தில் ஈடுபட்டுள்ள யாத்திரிகர்களின் சிரமம் கருதி, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மாந்தை கிழக்கு பிரதேச சபை செயற்படுத்தி வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் சிவதர்சனி பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பக்த்தர்கள் முல்லைத்தீவுமன்னார் எல்லை கிராம பாதையான பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்,பாலம்பிட்டி சென்று அங்கிருந்து மடுவிற்கு பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிலை செய்த சிற்பிக்கு கலாசாலையில் கௌரவம்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலுள்ள சரஸ்வதிதேவி திருவுருவச்சிலையை இலவசமாகப் புனரமைத்துத் வர்ணம் பூசிய கலாசாலையின் பழைய மாணவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியருமாகிய செகராசசிங்கம் செந்தில்வேல் கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன்குயின்ரஸ், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், தற்போதைய அதிபர் ச.லலீசன் ஆகியோர் இவருக்கான கௌரவத்தை வழங்கினர். இச்சிலைக்கான புனரமைப்புப் பணிக்கான நிதி அனுசரணையை இம் மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறவுள்ள சேவை உதவியாளர் ஐ. ரவிச்சந்திரன் வழங்கினார்.

இச்சரஸ்வதி தேவியின் திருவுருவச்சிலை 2003 ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் தலைமையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.


# பொது அறிவித்தல்

**ஸ்டெஸன் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட் (PV 3617) மற்றும் ஸ்டெஸன் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (PV 15663) எனும் நிறுவனங்களை கூட்டிணைக்கும் அறிவித்தல்**

ஸ்டெஸன் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஸ்டெஸன் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் எனும் நிறுவனங்களின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த இரு நிறுவனங்களையும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 242(1) அத்தியாயத்தின் பிரகாரம் கூட்டிணைத்து இனிமேல் ஸ்டெஸன் எக்ஸ்போர்ட்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட் எனும் பெயரில் தனி நிறுவனமாக நடாத்திக்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த கூட்டிணைத்தல் நிறுவன பதிவாளர் நாயகத்தினால் அனுமதி அளிக்கப்படும் நாள் முதல் அமுலுக்கு வரவுள்ளது.

**பணிப்பாளர்கள்**
**ஸ்டெஸன் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட்**
**ஸ்டெஸன் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கள் 2024.08.12

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5563
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.22,563,184.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 7 4 2 2 6 3

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 138
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 2 2 6 3

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3805
சீட்டிழுப்பு திகதி 2024.08.12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.69,809,283.12
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 19 40 41 42
விசேட எழுத்து X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 76341

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1911
2024.08.12
24957
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.441,704,062.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 18 27 52 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 VIP**
திகதி 2024.08.12
சீட்டிழுப்பு இலக்கம் 0389
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 4 1 0 3 1 5
L7 எழுத்து B
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,290,318.88

**ராசி சுப பலன்**
திகதி 2024.08.12
சீட்டிழுப்பு இலக்கம் 872
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,745,180.00
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 02 36 42 54
தனயோக இலக்கம் 85792
நாளுக்கான விதி எண் 08

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1593
2024.08.12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,102,991.44
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 08 18 21 36
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 68712

# நகர்வலம்



## மாத்தறையில் ஜனாதிபதி தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக மாத்தறை மாவட்டத்தில் பிரதான தேர்தல் அலுவலகமொன்று (11) மாத்தறை மாவட்ட ஒன்றிணைந்த குழு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கா, மின்வலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன உட்பட ஐ.தே.க, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஏனைய கட்சிகளின் அரசியல் தலைவர்கள், அமைப்பாளர்கள், மாகாண சபை, உள்ளூராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**வெலிகம தினகரன் நிருபர்**

## வெளிநாட்டு வர்த்தகத்திற்கான சவுதி அதிகார சபை ஆளுநருடன் தூதுவர் அமீர் அஜ்வத் சந்திப்பு



சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத், சவுதி அரேபியாவின் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான பொது அதிகார சபை (GAFT) தலைவர் மொஹமட் அப்துல் ஜப்பாரை கடந்த (07) ரியாதிலுள்ள அதன் தலைமையகத்தில் சந்தித்தார்.

இதன் போது சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் அவர்களை வரவேற்றுப் பேசிய GAFT அதிகார சபை ஆளுநர் மொஹமட் அப்துல் ஜப்பார், இரு தரப்பு நலன்களையும் அடைந்து கொள்ளும் நோக்கில் இரண்டு நாடுகளும் ஒன்றித்துச் செயற்பட முடிந்த சாத்தியமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி கூறியதுடன் இது தொடர்பில் GAFT அதிகார சபையின் ஆதரவு இறுதி வரை கிடைக்கப்பெறும் எனவும் குறிப்பிட்டார்.

இதன் போது இலங்கைக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான புராதன காலம் முதலான தொடர்புகளை நினைவுபடுத்திய தூதுவர் அமீர் அஜ்வத், இரு நாடுகளும் இணைந்து செயற்பட முடியுமான பகுதிளைக் கோடிட்டுக் காட்டியதுடன் குறிப்பாக வர்த்தக மற்றும் முதலீட்டு நோக்கில் ஒன்றிணைந்து செயற்பட முடியுமான விசேட துறைகளாக உணவு, விவசாயம், தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித் துறை, Real Estate மற்றும் நிர்மாணப் பணிகள் முதலியவற்றை முன்மொழிந்தார். தொடர்ந்தும் பேசிய தூதுவர், சவுதி அரேபியாவின் தொலைநோக்கு 2030 இலக்குகளை சாத்தியப்படுத்துவது தொடர்பில் கைகோர்த்து செயல்படுவதற்கான இலங்கையின் தயார்நிலையை எடுத்துரைத்ததுடன் சாத்தியமான நிலைமைகளைக் கண்டறியும் நோக்கில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான சவுதி அதிகார சபையின் (GAFT) வர்த்தகத் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச உறவுகளுக்கான பிரதி ஆளுநர் அப்துல் அஸீஸ் அல் ஸக்ரான், வெளிநாட்டு வர்த்தகத்திற்கான சவுதி அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வர்த்தகம் தொடர்பிலான முதலாம் செயலாளர் திருமதி. தஷ்மா விதானவஸம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## புத்தளம் வர்த்தக சமூகத்தினரின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவிப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்று தருவதாக வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் உறுதியளித்துள்ளார்.

புத்தளம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரி சங்கத்தின் (PUTWA) குழுவினர்கள் வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமத் அவர்களை அண்மையில் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து முன்வைத்தனர்.

புத்தளம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்த வர்த்தக சங்கத்தினர், இது தொடர்பான மகஜர் ஒன்றையும் ஆளுநரிடம் கையளித்தனர்.

இதன் போது PUTWA வினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வினை தான் முன்னின்று நிவர்த்தி செய்து தருவதாகவும் ஆளுநர் இதன்போது உறுதியளித்தார்

## வீதி அபிவிருத்தி திட்டங்கள் பொதுமக்களிடம் கையளிப்பு

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சருமான அநுப பஸ்குவலின் நிதி ஒதுக்கீட்டில் தொடங்கொட பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மூன்று கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

மாகாண சபை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட முப்பது லட்சம் ரூபா செலவில் இந்த கிராமிய வீதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் அமைச்சரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர், கிராமிய பொதுமக்களுடன் இணைந்து நாடாவை வெட்டி வீதிகளை திறந்து வைத்தார். முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தரித்துநின்ற பஸ் மீது ஆட்டோ மோதி விபத்து; மூவர் காயம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் சிலாபம் பிரதான வீதியின் முந்தல் மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் திங்கட்கிழமை (12) பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்தில் இருந்து சிலாபம் நோக்கிச் சென்ற குறுந்தூர தனியார் பஸ் ஒன்று முந்தல் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்றபோது, மதுரங்குளியில் இருந்து கட்டுநாயக்க நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியொன்று பஸ்ஸின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி ஹிதாயத் நகரைச் சேர்ந்தவர்களே இவ்விபத்துச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த மூவரில் ஒருவர் தொழில் நிமித்தம் கட்டாருக்கு செல்வதற்காக மதுரங்குளி ஹிதாயத் நகரில் இருந்து முச்சக்கர வண்டியில் கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிப் பயணித்த போது இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தின் போது முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி உட்பட மூவரும் படுகாயமடைந்து முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் , அம்மூவரும் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## தினகரன் முன்னாள் உதவி ஆசிரியர் ஸீ.எம்.எம். அமீனின் தாயார் காலமானார்

தினகரன் பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியரும் எழுத்தாளருமான ஸீ.எம்.எம். அமீனின் தாயார் ஜனாபா ஸகீனா காலித் மாவனெல்ல, ஹிங்குல்ல அலுத்நுவர இல்லத்தில் (12) காலமானார். அன்னார், பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹம்மத் (நளீமி) யின் மாமியாருமாவார். அன்னாரின் ஜனாஸா நேற்று (13) காலை 9.00 மணிக்கு தெல்கஹகொட ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், மத்ரஸா உஸ்தாத்மார்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

## பாடசாலை மாணவர்கள்; இரு குழுக்கள் மோதல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றின் இரு மாணவர்கள் குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட வாய் தர்க்கம் நீடித்ததனால் மாணவர் ஒருவர் தலையில் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் 19 வயதுடைய மாணவர் ஒருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## வறுமையில் வாழும் குடும்பத்துக்கு வீடு கையளிப்பு



பேருவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பேபிட்டிய, வலதர பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பமொன்றிற்கு சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் வீடொன்று அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனியைச் சேர்ந்த "Family Gerhard Walther City Of Gruendau" பரோபகாரிகளின் நிதியுதவியில் இந்த வீடு முழுமையாக புனரமைக்கப்பட்டு, அண்மையில் மேற்படி அமைப்பின் இலங்கை இணைப்பாளர் பேருவளை இர்ஸான் மொஹமடினால் சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்கு வைபவரீதியாக அன்பளிப்பு செய்யப்பட்டது. கடந்த கால சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு மேற்படி ஜேர்மனி அமைப்பு பேருவளை தொகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை இனங்கண்டு பல்வேறு வாழ்வாதார உதவிகளை இணைப்பாளர் இர்ஸான் மொஹமடின் வேண்டுகோளில் மேற்கொண்டு வந்துள்ளதை அனைத்து மக்களும் நன்றியோடு நினைவுகூருகின்றனர்.

இத்தொகுதியில் வருமானம் குறைந்த குடும்பத்துக்கு நிர்மாணிக்கப்பட்ட 390ஆவது வீடே அண்மையில் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹுஸைன் ஹாஜியாரின் தந்தையார் காலமானார்

மாவனல்லை நியூமன்ஸ் கல்லூரியின் உரிமையாளரும் சமூக சேவையாளருமான ஹுஸைன் ஹாஜியாரின் தந்தையார் ஆதம் பிச்சை (வயது 85) நேற்று மாராவ இல்லத்தில் காலமானார்.

அன்னார் மாவனல்லையைச் சேர்ந்த ஸரீனா, ரம்ஜான், நஸார், பாஸித் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று அஸர் தொழுகையோடு ஹிங்குல்லோய மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸாவில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



# ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியானால் அதிகார பகிர்வில் தீர்க்கமான முடிவு அமுலாகும்

## இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்



**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், இலங்கையில் 70 வருடத்துக்கும் அதிகமான காலம் புரையோடிப் போயிருக்கின்ற, அதிகார பகிர்வு விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவையெடுத்து அதனை அவர் அமுலாக்குவார் என, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (12) தேர்தல் அலுவலகம் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 4 இலட்சத்து 60 ஆயிரம் வாக்காளர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களை வெல்ல வைப்பது எதற்காக? அவர் வென்றால் எதை செய்வார்? எதனை செய்து காட்டி உள்ளார்? அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாங்கள் எவற்றையெல்லாம் சாதிப்போம் என்கின்ற வாக்குறுதிகளையும், கவர்ச்சிகரமான விடயங்களையும் நடைமுறைக்கு சாத்தியமானவற்றை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல இந்த காரியாலய திறப்பு விழா வெற்றியோடே நிறைவு பெறும் என நம்புகின்றேன்.

தேர்தல்கள் நெருங்கி வருகின்ற நிலையில், எங்களுக்கு எதிரான கருத்துகளும் ஆங்காங்கே எழும். அந்தக் கருத்துக்களை எல்லாம் முறியடித்து ஒரு பிரம்மாண்டமான வெற்றியை அடைய வேண்டுமாக இருந்தால் ஒவ்வொருவருடைய தனி மனிதனுடைய மனங்களிலே மாற்றம் வர வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் இயங்காமல் இருக்கின்ற சூழலிலே, முதலாவதாக ஜனநாயக தெரிவாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை நாங்கள் எதிர்கொள்ளஉள்ளோம். இந்தவெற்றிதான் எதிர்கால நாட்டினுடைய நம்பிக்கையாகவும், எதிர்கால இளைஞர் யுவதிகளுக்கு நம்பிக்கையாகவும், நாங்கள் ஒவ்வொருவரும் இந்த மண்ணிலே நம்பிக்கையோடு வாழக்கூடிய சக்தியை தருகின்ற தேர்தலாகவே அமையவிருக்கின்றது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியினுடைய காரியாலயத்திற்கு வருகை தந்திருந்தபோது, இந்த நாட்டில் புரையோடிப்போயிக்கின்ற விடயங்கள் தனக்கு தெரியும் எனவும் மிக நீண்ட அரசியல் வரலாற்றிலேயே இன முரண்பாடு காரணமாக மிக மோசமான நிலைமையை நாங்கள் இன்றும் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இவற்றையெல்லாம் தீர்க்க வேண்டுமாகயிருந்தால் நிச்சயமாக தமிழர்களுக்கு நம்பிக்கையான அதிகார பகிர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் அதனை மிகக் கூடிய விரைவில் கொடுப்பேன் என என்னிடம் தெரிவித்திருந்தார்.

மேலும், பொருளாதார வீழ்ச்சிக்கான ஆற்றலையும் அறிவையும் பல சந்தர்ப்பங்களில் உருவாக்கி இருக்கின்றார். அத்துடன், தமிழர்களுடைய பிரச்சினையையும் ஒரு சில உடன்படிக்கைகளையும், பல கடிதங்களில் கைச்சாத்திடுவதற்கும், அமெரிக்க இராஜதந்திரிகளுடன் பேசி அதிகார பகிர்வை வழங்குவோம் என்ற பல உத்தரவாதங்களை கொடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவது, வெறுமனே பொருளாதார கிடங்கிலிருந்து மீட்டெடுப்பது மாத்திரம் அல்ல. நாட்டில் 70 வருடத்திற்கும் மேலாக புரையோடிப்போயிருக்கின்ற அதிகார பகிர்வு விடயத்திலும், ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து அமுலாக்கி கொடுப்பார் என நாம் நம்புகின்றோம்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திலும் எழுச்சியை கொண்டு வந்து தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் ஒரு இனநடைமுறையை ஏற்படுத்தி அவர்களுக்கு அதிகார பகிர்வை கொடுத்து ஒரு சிறந்த நாடாக கட்டி எழுப்புவார். சிங்கப்பூரைப் போல மதச் சார்பில்லாத, மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையிலே முறுகலற்ற சரியான அரசியலமைப்பை கொண்டு வந்த தலைவராக மிளிர்ந்து அவர் ஒரு சர்வதேச ஒற்றுமைக்கு பாடுபட்டவர் என்ற சாதனையை பெறுவார் எனவும் நம்புகிறோம்.

அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்திலும், வடக்கு கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் ஜனாதிபதி சிறப்பான வெற்றியைப் பெற்று நிச்சயம் மீண்டும் ஜனாதிபதியாகுவார். அதற்கான சந்தர்ப்பங்கள் நாம் உருவாகிக் கொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பிளாந்துறை – குருக்கள்மடம் படகுப்பாதையை உடன் சீரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**



மட்டக்களப்பு வாவியை ஊடறுத்துச் செல்லும் அம்பிளாந்துறை – குருக்கள்மடம் படகுப்பாதை போக்குவரத்து மிக நீண்ட காலமாக சேதமடைந்தை நிலையில் இருப்பதாக அப்பிரதேச மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்திற்கும், எழுவாங்கரைப் பிரதேசத்திற்குமான பிரதான நீர் வழிப் போக்குவரத்து மார்க்கமாக விளங்குகிறது இந்த அம்பிளாந்துறை – குருக்கள்மடம் படகுப்பாதை போக்குவரத்தாகும்.

இந்நிலையில் இப்படகுப் பாதையின் இருபுறமும் பொருத்தப்பட்டுள்ள இரும்புச் சங்கிலிகள் துருப்பிடித்த நிலையில் வெடித்து காணப்படுகின்றன.

நாளாந்தம் இப் படகுப்பாதையின் ஊடாக பயணிக்கும் நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பு மேலங்கிகள் அணியாமல் ஆபத்தான பயணத்தையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சில வருடங்களுக்கு முன்னர் கிண்ணியா குறிஞ்சாங்கேனி படகுப் பாதை விபத்து இடம்பெற்றதைப்போன்று, மற்றுமொரு சம்பவம் நிகழாதிருக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்களும் கோரிக்கைவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கட்சியின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூரின் கல்முனை அலுவலகத்தில் வைத்து உறுப்பினர்களுடனான சினேகபூர்வ சந்திப்பில் ஈடுபட்டிருந்த போது

(படம் - எம்.என்.எம்.அப்ராஸ்)

# அம்பாறை மாவட்டத்தில் திடீர் மழை; சிறுபோக நெல் அறுவடை பாதிப்பு

## வீதியின் இருமருங்கிலும் நெல்லை உலர விடும் விவசாயிகள்

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**



அம்பாறை மாவட்டத்தில் பெய்யும் திடீர் மழையினால் சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாம் அறுவடை செய்த நெல் மழையால் ஈரமுற்றுள்ள நிலையில், அவற்றை கல்முனை அக்கரைப்பற்று, கல்முனை அம்பாறை பிரதான வீதியின் இரு மருங்கிலும் உலர விடும் நடவடிக்கையில் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பெரும்போகத்தின்போது ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு, சிறுபோகத்தில் பரவலாக சிறந்த விளைச்சல் கிடைத்தபோதிலும், இதுவரை நெற்சந்தைப்படுத்தும் சபை, விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யாதமையினால், அரிசி ஆலைகளுக்கே வழங்கி வருகின்றனர்.

இதனால், தாம் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# 25 வருடங்கள் இந்து மயானம் இன்றி வாழ்ந்த மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்த கிழக்கு மாகாண ஆளுநர்





**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுர கிராம மக்களுக்கு, இந்து மயானத்துக்கான காணியை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் (12) உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

பத்தினிபுர கிராமத்தில் வைத்து, உரிய ஆவணத்துடன் மக்களிடத்தில் இந்த காணி கையளிக்கப்பட்டது. சுமார் 25 வருடங்களாக இந்து மயானம் இன்றி வாழ்ந்த இப் பிரதேச மக்களுக்கு, தற்போது வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான, கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள காணியே இந்து மயானத்துக்காக இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, நீண்டகாலமாக நிலவிய இந்து மயான பிரச்சினைக்கு 10 நாட்களுக்குள் தீர்வு பெற்றுகொடுத்த கிழக்கு மாகாண ஆளுநருக்கு அப் பிரதேச மக்கள் தமது நன்றியினையும் தெரிவித்திருந்தனர்.

இதனிடையே, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள முத்து நகர் கிராம மக்கள், தங்கள் வயல் நில குடியிருப்பு பகுதிகளை இலங்கை துறைமுக அதிகார சபையினர் கையகப்படுத்த முயற்சிப்பதாக ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர்.

இதன்போது, இவ்விடயம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டுசாதகமானநடவடிக்கைஎடுக்கப்படும் என மக்களிடம் ஆளுநர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யானைகளின் அட்டகாசம் மக்கள் அச்சம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில், காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.தற்போது சிறுபோக வேளான்மைச் செய்கை நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால், இரவு வேளையில் வரும் காட்டு யானைக் கூட்டம் நெற்பயிர்களை துவசம் செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், ஒலுவில் அஷ்ரப் நகரிலுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு வரும் யானைக் கூட்டம், கிராமங்களுக்குள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால், தாம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே, அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய 31 வைத்தியர்களுக்கு நியமனம்



**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

அரச வைத்திய பீடங்களில் பட்டப்படிப்பை முடித்தபின்பு போதனா வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சியைப் பெற்று வெளியேறிய 31 வைத்தியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (12) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, சுகாதார அமைச்சினால் குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கான நியமனக் கடிதங்களை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆர்.முரளீஸ்வரன் வழங்கி வைத்தார்.அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தபோது நகர மற்றும் கஷ்டப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் முகங்கொடுக்கும் சுகாதார சீர்கேட்டை அவரிடம் முன்வைத்ததற்கிணங்கள், இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியர்கள் அதிகமாக உள்ளதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பௌதீகத் தன்மை, சுகாதாரப் பிரிவின் கீழ் உள்ள நகரப்புற வைத்தியசாலைகள் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வைத்திய சாலைகள் பற்றியும் மற்றும் அவற்றை அணுகுவது உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இச்செயலமர்வில் தெரிவிக்கப்பட்டன.

இதேவேளை, இவற்றைத் தவிர்த்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணிபுரிவதற்காக புதிதாக 39 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இவ்வருடம் மாத்திரம் 134 முறைப்பாடுகள்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திற்கு இவ்வருடம்(2024) ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் மட்டும் 134 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக, அதன் பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இதில் 64 பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, காணி தொடர்பான பிரச்சினைகள், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிட்டாத பிரச்சினைகள், அநீதியான ஆசிரிய இடமாற்றங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகள் இந்த முறைப்பாடுகளில் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

## இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி

# அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்கும் சத்தியாக மாறும் என்பதில் ஐயமில்லை

**ஒலுவில் விசேட நிருபர்**



தேர்தலில் தெரிவாகும் ஜனாதிபதி, சிறுபான்மை மக்களை அனுசரித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்க வேண்டுமென, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட மக்களின் கருத்துக்களை அறியும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (12) அட்டாளைச்சேனையில் நடைபெற்றபோது அதில் கலந்துக்கொண்டு உரையாற்றிய அவர்,

மக்களின் கருத்துகளை உள்வாங்கி எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக கட்சியின் உயர் பீடம் தீர்மானிக்கும்.

கடந்த இரண்டு வருடங்களுக்குள் அரசாங்கம் செய்த நல்ல சேவைகளுக்கு நாங்கள் ஆதரவு வழங்கி வந்தோம். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் ஜனாதிபதியை தீர்மானிக்கும் சத்தியாக மாறும் என்பதில் ஐயமில்லை.

தேர்தலில் தெரிவாகும் ஜனாதிபதி, இனவாதம், மதவாதம் இன்றி, ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் மதித்து நாட்டை கொண்டுச் செல்ல வேண்டும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, எந்த ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் நிபந்தனைகளை விதிக்கப்போவதில்லை. ஒரே நாட்டுக்குள் சமத்துவம், சகோதரத்துவமாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் நேற்று முன்தினம் (12) பதிவான வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி நோக்கி பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும், ஒன்றுடன் ஒன்று பின்பக்கமாக மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும், சிகிச்சைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில, விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை களுவாஞ்சிக்குடி பொலிஸ்சார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மனக்கணித போட்டிக்கு ஐந்து பேர் தெரிவு









**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

UCMAS தேசிய மனக்கணித போட்டி, அண்மையில் (10) சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டிக்கு நாடளாவிய ரீதியில் 3000 போட்டியாளர்கள் பங்குபற்றிருந்த நிலையில், ஒலுவில் சார்பாக பங்குபற்றிய 07 மாணவர்களில் 05 மாணவர்கள் வெற்றி வாகையை சூடிக்கொண்டனர்.

இதில் ஒலுவில் மற்றும் அக்கறைப்பற்று நிலைய மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இப்போட்டி, நிகழ்வுக்கு பிராந்திய முகாமையாளர் என் ஜீ.நுபைல் அகமட் மற்றும் பயிற்றுவிப்பாளர் ரீ எம்.பவாஸ் ஆகியோர் மாணவர்களை நெறிப்படுத்தினர்.மேலும் டிசம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டிக்கான தயார்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடற்றொழில் சமூகம் முழுமையான ஆதரவு

## கடற்றொழிலாளர் சம்மேளன ஊடக பேச்சாளர்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



கடற்றொழில் சமூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன ஊடக பேச்சாளர் வி.அருள்நாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். '

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கில் இந்திய இழுவைப்படகுகள் அதிகமாக வந்துகொண்டிருந்தன.

இப்போது எமது எல்லைக்குள் வரும் படகுகளை கடற்படையினர் பிடித்து வருகின்றனர். இதற்கு கடற்றொழில் அமைச்சரின் அழுத்தமே காரணம்.

எங்கள் வாழ்வாதாரத்தை அழிக்க வரும் இந்திய இழுவைப்படகினை எங்கள் கடற்படையினர் கைதுசெய்கின்றார்கள்.

ஆகவே இந்த கடற்படையினர் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் தொழிலில் ஈடுபட ஆசையாக இருக்கும்.

இலங்கையில் சட்டவிரோத தொழில்கள் அதிகரித்துவருகின்றன. சுருக்கு வலைகள் பாவிப்பது போன்றன தற்போது கடற்படையால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மீனவ சமூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

மீனவ சமூகம் அண்மையில் ஜனாதிபதியை சந்திப்பதற்காக கொழும்பு சென்றிருந்தது. அங்கு இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் இருந்து மீனவர்கள் வந்திருந்தார்கள்.

பொருளாதார நெருக்கடியான நேரத்தில் ரூ.1800 கொடுத்து எண்ணெய் பெற்று தொழில் செய்தோம். இரவிரவாக வரிசையில் நின்றோம். அந்த நிலைமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாமல் ஆக்கியுள்ளார்.

ஆகவே மீனவ மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# யாழில் Jaffna Edu Expo கண்காட்சி



மாபெரும் இலவச கல்விக் கண்காட்சியொன்று எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக Jaffna Edu Expo கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் அ.அஞ்சலிகா தெரிவித்துள்ளார்.

குறித்த கண்காட்சி தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாபெரும் கல்வி கண்காட்சியான Jaffna Edu Expo கண்காட்சி எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. இது முற்றிலும் இலவசமான ஒரு கண்காட்சியாகும்.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தர கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் அடுத்த கட்டம் எந்த கல்வியை தெரிவுசெய்ய வேண்டும், அவர்களது எதிர்காலத்தை எவ்வாறு திட்டமிட வேண்டும் என தெரியாமல் தடுமாறுகின்றனர். ஆகவே பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவை பெற வேண்டும் என்பதற்காகவே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அனைத்து கல்விசார் நிறுவனங்களும் இதில் பங்குபற்றவுள்ளன. எனவே குறித்த திகதிகளில் நீங்கள் வருகை தந்தால் பூரணமான ஒரு தெளிவூட்டலை பெற்றுக் கொள்ளலாம்.

முன்பொரு காலத்தில் வடபகுதியானது கல்வியில் சிறந்த நிலையில் விளங்கினாலும் தற்போது அந்த நிலை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. அதற்கான காரணம் மாணவர்களுடைய பார்வை வேறு திசைகளை நோக்கி திரும்பியுள்ளது. ஆகையால் அப்படியான பார்வையிலிருந்து மாணவர்களுடைய பார்வையை கல்விக்குள் கொண்டு வருவதற்காகவே நாங்கள் கல்விக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மோட்டார் குண்டுகள் கண்டுபிடிப்பு



**நாகர்கோவில் விஷேட நிருபர்**

இயக்கச்சிப் பகுதியில் வேலிக்கு தூண் நடுகை செய்த போது மோட்டார் வர்க்க இரண்டு ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதியில் நேற்றுமுன்தினம் கிடங்கு வெட்டிய போது குண்டுகள் காணப்பட்டமை தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை யடுத்து கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



இலங்கை முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் பிரத்தியேக செயலாளர் பி. என். விஜேரத்னவை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நிரந்தர கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் மனு ஒன்றை கையளித்தனர். **(கண்டி தீபன்)**

# பாடகர் சத்தியபிரகாஷுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவன பணிப்பாளர்



வடக்கின் செல்லக் குரலுக்கான தேடலின் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கைக்கு வருகை தரவுள்ள பிரபல பாடகர் சத்திய பிரகாஷை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து அழைப்பு விடுத்தபோது...

# வடமாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் வவுனியாவில்

வட மாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் முல்லைத்தீவு மாவட்ட போட்டிகள் எதிர்வரும் 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட போட்டியாளர்களுக்கு நேர்முகத் தேர்வு இல்லை. அவர்கள் நேரடியாக 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வில் தோற்ற முடியும்.

வவுனியா மாவட்ட போட்டியாளர்கள் எதிர்வரும் 2024.08.17ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.

இவர்களுக்கான முதலாவது சுற்றுப் போட்டி எதிர்வரும் 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இவர்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வின் போது இசை இல்லாது பாட வேண்டும். முதலாம் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு அதே தினமான 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரண்டாம் சுற்று நடைபெறும்.

இரண்டாம் சுற்றின் போது பக்திப் பாடல் ஒன்றும் பாரம்பரிய இசை பாடல் (கிராமிய துள்ளல் இசை பாடல் classical music) ஒன்றும் பாட வேண்டும். இரண்டையும் பயிற்சி செய்து அதற்குரிய கரோக்கியை +94 78 888 8585 என்ற whats app இலக்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவர்கள் தங்களுக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு இதனை 2024.08.16ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# சர்வதேச யானைகள் தினம் அனுஷ்டிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

சர்வதேச யானைகள் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்திற்கான சுற்றுச்சூழல் கழகமும், கிளி/ விவேகானந்தா வித்தியாலயமும் இணைந்து சர்வதேச யானைகள் தினத்தை சிறந்த முறையில் கொண்டாடியது. இவ் விழாவுக்கு யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவசங்கர் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழல் கழக செயலாளர் ம.சசிகரன் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர் எஸ்.லதீஸ் குமாரும் கலந்து சிறப்பித்தனர். விழாவின்போது, பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

# பாடகி நித்யஸ்ரீ மகாதேவனுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவன பணிப்பாளர்



வடக்கின் செல்லக் குரலுக்கான தேடலின் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கைக்கு வருகை தரவுள்ள பிரபல பாடகி நித்யஸ்ரீ மகாதேவனை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து அழைப்பு விடுத்தபோது.....

# தென்மராட்சிப் பிரதேசங்களுக்கு அங்கஜன் இராமநாதன் எம்.பி விஜயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களால் பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது தென்மராட்சியில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக மக்களால் பரிந்துரைக்கப்பட்ட சனசமூக நிலையங்கள்,முன்பள்ளிகள்,பொதுநோக்கு மண்டபங்கள்,பாடசாலைகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட 36 பொது இடங்களுக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் மேற்படி பொது அமைப்புக்களுடைய மேலதிக தேவைப்பாடுகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டறிந்ததுடன்அவசர தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் உரிய திணைக்களங்கள் ஊடாக முன்னெடுத்திருந்தார்.

# பசுந்தோகை நூல் வெளியீட்டு விழா

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த வெளியீடாகிய, பசுந்தோகை சஞ்சிகை வெளியீடு விழா இன்று (14) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு, கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

விவசாய பீட 31ஆவது ஆண்டு அணியினரின் ஏற்பாட்டில் 19ஆவது இதழாக, இந்நூல் வெளிவருகின்றது.

# இ.போ.ச பஸ்ஸுடன் மோதிய மீன்லொறி; சாரதிகள் காயம், அம்பாறையில் சம்பவம்





மீன் ஏற்றிச் சென்ற சிறியரக லொறியொன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று (13) அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

விபத்தில், வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதிகள் காயமடைதுள்ள நிலையில், அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியினூடாக, அக்கரைப்பற்றுலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இ.போ. சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும், மட்டக்களப்பு கல்முனை வீதி வழியினூடாக மீன் ஏற்றிச் சென்ற சிறிய ரக லொறியொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மீன் ஏற்றிச் சென்ற லொறி, வேகக் கட்டுப்பாட்டின்றி பணித்தமையினாலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளதாக விபத்தினை நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தில், பஸ் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மீன் ஏற்றிச்சென்ற லொறியின் முன்பகுதி சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் பெண்ணொருவர் கைது

சட்டவிரோத சிகரெட்டுகளை தும்பளைப் பகுதியில் விற்பனை செய்த பெண்ணொருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளைப் பகுதியில் இவ்வாறான சிகரட் விற்பனை செய்யப்படுவதாக கரவெட்டி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் சந்தேகநபர் 240 சிகரட்டுக்களுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைக்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# திருமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம், மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில், திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று (13) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடந்த விவசாயக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் மற்றும் 2024, 2025 ஆம் ஆண்டுக்கான பெரும்போக செய்கை தொடர்பாகவும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைச்சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் டொக்டர். ரி.கருணைநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள்,விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கணவன் - மனைவி குடும்பத் தகராறு; உயிரை மாய்த்துக்கொண்ட வைத்தியர்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வைத்தியர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவமொன்று ஹொரவப்பொத்தானை பொலிஸ் பகுதிக்குட்பட் மொரகேவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

77 ஆவது மைல்கல் மொரகேவ பகுதியில் வசித்து வரும் முதியன் சலாகே சாமர மதுசங்க என்ற 38 வயதுடைய வைத்தியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பித்திகொல்லாவ பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய இவர், தனது மனைவியின் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறே இவ்வுயிரிழப்புக்கு காரணமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த வைத்தியரின் மனைவி தாதியாக பணியாற்றி வருபவரென தெரிவித்த ஹொரவப்பொத்தானை பொலிசார்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கேள்வி அறிவித்தல்**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**தெமட்டகொடையிலுள்ள இபெகூ தலைமை அலுவலகக் கட்டிடம், கொலன்னாவையிலுள்ள விவசாய இரசாயனம் மற்றும் SSE வேலைத்தளம் மற்றும் முத்துராஜவெல முனையத்திற்கான ஜெனிடோரியல் சேவை**
B/48/2024

2025-01-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு ''தெமட்டகொடையிலுள்ள இபெகூ தலைமை அலுவலகக் கட்டிடம், கொலன்னாவையிலுள்ள விவசாய இரசாயனம் மற்றும் SSE வேலைத்தளம் மற்றும் முத்துராஜவெல முனையத்திற்கான ஜெனிடோரியல் சேவை'' எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் ஒரு தொகுதி விலைமனு ஆவணங்களுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை (ரூ. 4,241.78 + 2.5% SSCL + 15% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 30.08.2024ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2024-09-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதி முகாமையாளர் (ஆதனங்கள்) திரு. J.A.C.K.J. பண்டார அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-5455133 அல்லது மின்னஞ்சல்: jackjbandara@gmail.com

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455336**
**தொலைநகல்: 0094-11-2106769**

## பெறுகை அறிவித்தல்

**ஹோமாகம வலயக் கல்விப் பணிமனை - 2024**

## மீகொட கல்வி அபிவிருத்தி வள நிலையத்தின் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல்

ஹோமாகம வலயக் கல்விப் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் மீகொட கல்வி அபிவிருத்தி வள நிலையத்தின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக 2024/2025 உடன் சம்பந்தப்பட்ட ஒருவருட கால எல்லைக்கு வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கு பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.

| | விபரம் | மீளளிக்கப்படாத தொகை (ரூ) | மீளளிக்கப்படும் தொகை (ரூ) | மேலதிக விபரங்களை விசாரிப்பதற்கு |
|---|---|---|---|---|
| P1 | மீகொட கல்வி அபிவிருத்தி வளநிலையத்தின் உணவகத்தை நடத்திச் செல்லல் | 1,000.00 | 5,000.00 | 011 - 2855245 |

2. விண்ணப்பதாரிகள் மேற்படி சேவை வழங்குதல் சம்பந்தமாக பதிவுசெய்த வழங்குநர்களாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களுக்கு கேள்விகள் வழங்கல் வேளையில் ரூ.50,000/- தொகையை மீளளிக்கப்படும் வைப்பாக ஹோமாகம வலயக் கல்விப் பணிமனையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
3. மேற்படி கேள்விக்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்கள் 2024.08.15 முதல் 2024.09.03 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் கேள்விகோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத கட்டணத்தை வலயக் கல்விப் பணிமனையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விக்கும் கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை செலுத்திய பின்பு அதற்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை இணைத்திருத்தல் கட்டாயமாகும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.09.04 மு.ப. 10.00 இற்கு முன்பு வலயக் கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது வலயக் கல்விப் பணிமனைக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
7. இவ்விலைமனுக்கள் கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த மாற்றங்கள் சம்பந்தமாகவும் இருக்கின்ற அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**நீதிமன்ற வீதி, ஹோமாகம.**
**2024 ஓகஸ்ட் 14ம் திகதி**

## வடமேல் மாகாணம்
## வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து அதிகார சபை
## அறிவித்தல்
### வடமேல் மாகாணத்திற்குள் சட்டவிரோத பயனிகள் போக்குவரத்து சேவையைத் தவிர்த்தல்

வடமேல் மாகாண வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் தற்போதைய காலத்தில் செல்லுபடியாகும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் அல்லது வேறு அதிகார சபையினால் அதிகாரத்தின் கீழ் அன்றி வடமேல் மாகாணத்தில் இரு இடங்களுக்கிடையில் கட்டணம் அல்லது அனுகூலத்தின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் மற்றும்/ அல்லது அலுவலக ஊழியர்கள் மற்றும் / அல்லது தொழிற்சாலை ஊழியர்கள் என்பவர்களை போக்குவரத்து செய்வதற்காக மோட்டார் வாகனமொன்றைப் பாவிப்பது சட்டவிரோதமாகும் என இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

2018 இல. 07 வடமேல் மாகாணத்தின் வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து சேவை சட்டவாக்கத்தின் விதிமுறைகள், கட்டளைகள் மற்றும் விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையெடுக்கப்படும்.

2018 இல. 07 வடமேல் மாகாணத்தின் வீதிகளுக்கிடையிலான வீதி போக்குவரத்து அதிகார சபையின் அதிகார சட்டவாக்கத்தின் 54 மற்றும் 55 பிரிவு மற்றும் 61 பிரிவின் "பயனிகள்" என்ற கருத்து கீழ்க்காணுமாறு அமையும்.

54. அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் அனுமதிப் பத்திரம் இன்றி பாடசாலை மாணவர்களை போக்குவரத்து செய்யக்கூடாது அத்துடன் அவ்வாறு செய்தல் இச்சட்டவாக்கத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும். மேற்படி குற்றம் மேற்கொள்ளும் நபர்களிடமிருந்து அக்குற்றத்திற்காக ரூபா ஐயாயிரம் (ரூ. 5000.00) தளத் தண்டம் அதிகார சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவர் அறவிட்ட அத்தண்டத் தொகையை செலுத்தத் தவறும் வேளையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அல்லது அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக குறித்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும் அத்துடன் வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்படின் ரூபா இரண்டாயிரத்திற்கு (ரூ. 2000/-) குறையாது ரூபா ஐம்பதாயிரத்திற்கு (ரூ. 50000/-) மேற்படாத தண்டம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கப்பட அல்லது இரு தண்டங்களுக்கும் உற்படுதல் வேண்டும்.

55. அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரம் இன்றி தொழிற்சாலைக்காக ஊழியர்களை போக்குவரத்து செய்தல் கூடாது அத்துடன் அவ்வாறு செய்தல் இச்சட்டவாக்கத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும். அக்குற்றத்தை இழைக்கும் நபர்களிடமிருந்து குறித்த ஆண்டிற்காக அறவிடப்படும் அனுமதிப் பத்திர கட்டணம் போன்று இருமடங்கு மற்றும் ரூபா ஐயாயிரம் (ரூ. 5000.00) தளத் தண்டத்தை அதிகார சபையினால் அதிகாரம் வழங்கப்படும் அதிகார சபையின் ஏதேனும் அதிகாரியொருவருக்கு செலுத்துதல் வேண்டும். அவ்வாறான கொடுப்பனவை செலுத்தத் தவறும் வேளையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அல்லது அதிகார சபையின் அதிகரிகளுக்கு அவ்வாறான நபர்களுக்கு எதிராக குறித்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுவதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்படின் ரூபா இரண்டாயிரத்திற்கு (ரூ. 2000/-) குறையாத மற்றும் ரூபா ஐம்பதாயிரத்திறகு (ரூ. 50000/-) மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு விளக்கமறியலுக்கு செல்லுவதற்கு அல்லது அத்தண்டனைகள் இரண்டிற்கும் உற்படுதல் வேண்டும்.

61. கருத்து பிரிவு "பயனிகள்" என்பது வாடகை வாகனம் அல்லது பஸ்ஸில் பாடசாலை சேவை, பஸ் அல்லது வேனில் தொழிற்சாலை பஸ்ஸில் கட்டணத்தைச் செலுத்தி பிரயாணம் செய்யும் நபர் எனும் கருத்தாகும்.

**தற்போது காணப்படும் மேற்படி விதிமுறைகள் 2024.10.01 முதல் கடுமையாக அமுல்படுத்தப்படும்.**

பஸ், வேன், திரீவீல் மற்றும் வேறு மோட்டார் வாகனங்களில் கட்டணத்தின் அடிப்படையில் வடமேல் மாகாணத்திற்குள் பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்களை போக்குவரத்து செய்வதற்காக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிபார்ப்போர் 2024.09.30ம் திகதிக்கு முன்பு வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையில் பதிவு செய்வதுடன் குறித்த விண்ணப்பங்களை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 8.30 முதல் பி.ப. 4.15 வரை அதிகார சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்: 037-2229820, 037-3618000**
**தலைவர், வீதிகளுக்கிடையிலான பயனிகள் போக்குவரத்து அதிகார சபை (வடமேல் மாகாணம்), ஹால்பார சந்தி, போயகனே.**
**மின்னஞ்சல் முகவரி: rptanwp@gmail.com**

# ஹோமியோபதி மருத்துவ நிபுணர்களைப் பதிவுசெய்தல்

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரிவு 30 (1) இன் பிரகாரம் 2024.07.26 ஆம் திகதி 05 வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை சான்றுப்படுத்தக்கூடிய இலங்கையர்களிடமிருந்து பதிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வறிவிதானத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் பத்திரமானது தெளிவான பெரிய எழுத்துக்களில் ஆங்கிலத்தில் நிரப்பப்படுவதுடன் பின்வரும் ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் பரிசீலனை கட்டணமாக ரூபா 3,000.00 இலங்கை வங்கியின் ஹோமியோபதி நிதியத்தின் கணக்கு இலக்கம் 0002026466 வரவு வைக்கப்படுவதுடன் அதன் மூலப் பிரதியை இணைத்து வைத்திய சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

1. கிராம சேவகரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்
2. ஹோமியோபதி மருந்து கொள்முதல் பில்கள் மற்றும் ரசீதுகள்
3. ஹோமியோபதி கோப்பு பதிவுகள்
4. சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபையால் வழங்கப்பட்ட சான்றிதழ்
5. சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகளால் அவர்களின் கிளினிக் வளாகத்திற்கு வழங்கப்பட்ட கட்டண ரசீதுகள்

விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி திகதி 2024 செப்டம்பர் 13 ஆகும், அதற்கு முன்னர் விண்ணப்பங்களை மருத்துவ சபைக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது "பதிவாளர், இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை, வெலிசர, ராகம" பார்வையிடுவதன் மூலம் அனுப்ப வேண்டும்.

**பதில் பதிவாளர்,**
**எண்.94,**
**ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,**
**வெலிசர,**
**ராகம.**

*Format of Application*

## HOMEOPATHIC MEDICAL COUNCIL
## HOMEOPATHIC PRACTITIONER'S REGISTRATION EXAMINATION
**Under Section 30(1) of Homeopathy Act. No. 10 of 2016**

**Application Form**

Office Use
Reference No : ......................
Date of Receipt : ...................

Medium :- Sinhala
Tamil
English

1. Full Name (in BLOCK CAPITAL) : ..............................................
2. Name with Initials : ..............................................
3. Postal Address (In BLOCK CAPITAL) : ..............................................
   No : ..............................................
   Street / Village ..............................................
   City : ...................................... Postal Code : ..............................
4. Date of Birth : .............................. 5. Age : ..............................
6. Sex : F/M ..............................................
7. National ID No : ..............................................
8. Telephone Number :
   Home : ...................... Clinic : .................... Mobile : ....................
9. Permanent/Residential Address :
   ..............................................
   ..............................................
   ..............................................
10. Grama Niladhari Division : ..............................................
11. Divisional Secretary Division : ..............................................
12. Police Division : ..............................................
13. Place and Address of Practice : ..............................................
14. Period of Practice : ..............................................
15. Time allocated for Homeopathic Practice : ..............................
16. (i) Are you engaged in any other vocation ? Yes / No
    (ii) If yes, give details : ..............................................
17. How do you obtain your Homeopathic Medicines and Utilities ?
18. Educational Qualifications : G. C. E. (O/L) Year : ................

| Subjects | Grade |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |

G.C.E. (A/L) Year : .......

| Subjects | Grade |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

19. Medical or other Professional Qualifications (if any) : ....................
20. Proficiency in English :
    (i) Written : (ii) Communication :
21. (i) Have you ever applied for Homeopathic registration under Section 27 of Homeopathy Act, No. 7 of 1970 ?
    Yes/No
    (ii) If yes, give details : ..............................................2
22. Declaration :

I the undersigned..............of ............ do hereby declare that all the information given by me in this application are true to the best of my knowledge. I accept that any of the information given by me in this application is in anyway false or incorrect, my application may be rejected. I am also aware that it is a violation of the Homeopathy Act to provide false information. Having known them I do affix my signature at ............ on the ..............day of .................. 20 ................................

Date : ................................ Signature : ...........................

23. Certification :

I, the Grama Niladhari of GS Division ................do hereby certify that the applicant .................. is a resident of the above division and he/she is in homeopathic practice since ..............................

Name : ..............................................
GS Division : ....................................
Date : .................................. Signature : ......................

24. Certificate of Divisional Secretary :

I certify that the above statement is true and correct.

Date : ............................ Signature : .....................

Official Use

| Date of Receipt | | Interview held on | | |
|---|---|---|---|---|

(a) Name of the Candidate : ..............................................
கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் கல்தேமுல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 520213 பிரிவு இல 0091 துண்ட இல 04 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த. இல. 39, சுதர்மாராம வீதி, கல்தேமுல்ல, மொரட்டுவ எனும் விலாசத்தைக் கொண்ட அகம்பொடி முணிதாச மென்டிஸ் என்பவர் 15.03.2023 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 12.09.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

## இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையானது சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிவுகளை அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய அக்கட்டளைச் சட்டத்தின் (136ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2024ஆம் ஆண்டு 08 மாதம் 28ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர,**
**தவிசாளர்**
**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05,**
**2024ஆம் ஆண்டு 08 மாதம் 13ஆந் திகதி**

**அட்டவணை**

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிவுகள் 1949 ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 2014 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதிய 1881/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி II**

நாளாந்த நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I | நாளாந்தச் சம்பளம் (இத் தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்) | ரூபா.1350.00 |
| II | உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு | ரூபா. 350.00 |
| III | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

## தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிவுகளை அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய அக்கட்டளைச் சட்டத்தின் (136ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2024ஆம் ஆண்டு 08 மாதம் 28ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர,**
**தவிசாளர்**
**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05,**
**2024ஆம் ஆண்டு 08 மாத 13ஆந் திகதி**

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 2014 யூலை மாதம் 24 ஆம் திகதிய 1872/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி II**

நாளாந்த நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I | நாளாந்தச் சம்பளம் (இத் தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்) | ரூபா.1350.00 |
| II | உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு | ரூபா. 350.00 |
| III | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

## தலுபொத இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் மேல்நிலை நீர்த் தொட்டியை நிர்மாணித்தல்

### ஒப்பந்த இல. බන්ධ/ඉ/පල්ලන්සේන/ජලටැංකිය/2024

பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 7.3 மில்லியன் ரூபா (வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி) மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான தலுபொத இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் மேல்நிலை நீர்த் தொட்டியை நிர்மாணிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-09, 150, பேஸ்லைன் வீதி, சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**வேலையின் சுருக்கமான விபரம்** : தலுபொத இளைஞர் சீர்திருத்த நிலையத்தில் மேல்நிலை நீர்த் தொட்டியை நிர்மாணித்தல்
**திட்டத்தின் அமைவிடம்** : தலுபொத சிறைச்சாலை
**ஒப்பந்தக் காலம்** : 140 நாட்காட்டி நாட்கள்

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். CIDA (ICTAD) C7 அல்லது C6 மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட NERD பதிவு செய்யப்பட்ட உரிமம்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை: CIDA (ICTAD) C7 அல்லது C6 மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட NERD பதிவு செய்யப்பட்ட உரிமம் மற்றும் தொடர்புடைய துறையில் முன் அனுபவம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-09, 150, பேஸ்லைன் வீதி, சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம், பொறியியல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (0114677126 - பொறியியல் பணிப்பாளர் (cov))
6. 2024-08-14ஆம் திகதி முதல் 2024-09-04ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத 3,200.00 ரூபா கேள்விக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-09, 150, பேஸ்லைன் வீதி, சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம், பொறியியல் பிரிவிலிருந்து பெறப்படும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்களை முடிவுறுத்தல் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, 150, பேஸ்லைன் வீதி, சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம், பொறியியல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (தொடர்பிலக்கம்: 0114677126). விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரல் இல. බන්ධ/ඉ/පල්ලන්සේන/ජලටැංකිය/2024தலுபொத இளைஞர் சீர்திருத்த மேல்நிலை நீர்த் தொட்டியை நிர்மாணிப்பதற்கான விலைமனு'' - ''2024-09-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்கவேண்டாம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-09-04ஆம் திகதி முதல் 2024-11-20ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்.
9. விலைமனுக்களுடன் 73,000.00 ரூபா விலைமனுப்பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கோரல் பிணை முறி 2024-09-04ஆம் திகதி முதல் 2024-12-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
11. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-09-04ஆம் திகதி 14.00 மணித்தியாலமாகும்.
12. சகல விலைமனுக்களுடனும் 73,000.00 ரூபாவிற்கான பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்களுக்கு (2024-09-04 முதல் 2024-12-18 வரை) செல்லுபடியாதல் வேண்டும். இந்த விலைமனுப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம்,**
**இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09.**

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

HDTS

## வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் (HDTS)

### வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கத்திற்காக WIFI வலையமைப்பொன்றை நிறுவுதல், கட்டமைத்தல் மற்றும் செயற்பட வைத்தல்

### Contract No.: HDTS/WIFI Networking /2024

1. வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கத்திற்காக WIFI வலையமைப்பொன்றை நிறுவுதல், கட்டமைத்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை HDTS தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. கேள்விக்கோரலானது தேசிய சந்தைவிலை முறையின் மூலமாக நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை இலங்கை, கொழும்பு-10, டெம்பிள் வீதி, 37/36, ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்க தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி: +94 11 2678163, +94 11 2662292, +94 11 2676088, +94 11 2685016. தொலைநகல்: +94 11 2678163) கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2024.08.14 ஆம் திகதியிலிருந்து 2024.08.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்க தலைவரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கையேற்கப்படலாம். (தொலைபேசி: +94 11 2678163, +94 11 2662292, +94 11 2676088, +94 11 2685016. தொலைநகல்: +94 11 2678163 ) விலைமனுதாரர் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலதிக தகவலுக்காக இடப்பரப்பை பரீட்சிக்கலாம்.
5. கேள்விக் கோரல்கள் இரு பிரதிகளில் 2024.08.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் தலைவர், வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம், 37/36, டெம்பிள் வீதி, கொழும்பு-10, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. விலைக்கோரல்கள் 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு புகழ்வாய்ந்த வங்கியிலிருந்தும் பெறப்பட்டதும் 50,000 ரூபா பெறுமதியானதுமான கேள்விப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**37/36, டெம்பிள் வீதி,**
**கொழும்பு-10, இலங்கை.**
**+94 11 2678163.**
**2024.08.14**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want


- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## அல் முபாறக் கால்பந்தில் அல் பத்ரியா அணி வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மல்வான அல் முபாறக் தேசிய கல்லூரி பழைய மாணவர்களின் பங்களிப்புடன் ஒழுங்குசெய்திருந்த கம்பஹா மற்றும் களனி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்து சம்பியன்சிப் போட்டியில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

எக்ஸ் மொபைல் அனுசரணையில் அல் முபாறக் தேசிய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தத் தொடரில் திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும், உடுகொட அல் அரபா மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந் நிகழ்வுக்கு இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார். இதில் எக்ஸ் மொபைல் நிறுவன தவிசாளர் முஹம்மட் றிஸாம் கௌரவ அதிதியாகவும், உதவி கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.தௌஸீர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

## இலங்கை வரும் நியூசிலாந்தின் 15 பேர் டெஸ்ட் குழாம் அறிவிப்பு

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்களுக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் டிம் சௌதி அணித்தலைவராக செயற்படவுள்ளதோடு கேன் வில்லியம்சன் மற்றும் ரச்சின் ரவீந்திரா ஆகியோர் 15 பேர் கொண்ட நியூசிலாந்து குழாத்தில் இடம்பெற்றுள்ளனர். குறிப்பாக சுழற்பந்துக்கு சாதகமான இந்திய துணைக் கண்ட ஆடுகளங்களை எதிர்கொள்ளும் வகையில் ஐந்து சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

சுழற்பந்து சகலதுறை வீரர் மைக்கல் பிரேஸ்வெல் அணிக்கு திரும்பி இருப்பதோடு மிட்சல் சான்ட்னர், ரச்சின் ரவிந்திரா மற்றும் கிளன் பிலிப்ஸ் ஆகியோர் மேலதிக சுழற்பந்து வீச்சாளர்களாக உள்ளனர். அணியில் ஒரே விசேட சுழற்பந்து வீச்சாளராக அஜாஸ் படேல் இடம்பெற்றுள்ளார்.



அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியா வரும் நியூசிலாந்து அணி நொய்டாவில் செப்டெம்பர் 9 தொடக்கம் 13 ஆம் திகதி வரை நடைபெறும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ளது. தொடர்ந்து இலங்கை வரவுள்ள நியூசிலாந்து அணி இலங்கைக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது.

இதன் முதல் போட்டி செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதோடு இரண்டாவது போட்டி செப்டெம்பர் 29–30 இல் நடைபெறவுள்ளது. இந்த இரு போட்டிகளும் காலியிலேயே நடைபெறவுள்ளன.

நியூசிலாந்து குழாம்: டிம் சௌதி (தலைவர்), டொம் பிளன்டல் (வி.கா.), மைக்கல் பிரேஸ்வெல், டெவோன் கொன்வே, மட் ஹென்ட்ரி, டொம் லதம் (உப தலைவர்), டரில் மிட்சல், வில் ஒருக், அஜே பட்டேல், கிளன் பிலிப்ஸ், ரச்சின் ரவிந்திரா, மிட்சல் சான்ட்னர், பென் சீர்ஸ், கேன் வில்லியம்சன், வில் யங்.

## சம்பியனானது ஓரியன்ஸ்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



கெகிராவ பிரதேச கிரிக்கெட் கவுன்சிலால் மூன்றாவது முறையாகவும், நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் கெகிராவ ஓரியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

மொத்தம் 21 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது. அதில் நேகம நியு ஸ்டார் அணியை எதிர்கொண்ட ஓரியன்ஸ் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. தொடர் நாயகன் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை ஓரியன்ஸ் அணியின் சமன் வென்றார். சிறந்த பந்துவீச்சாளராக நியு ஸ்டாரின் ஏ.ஏ. அமீன் தெரிவானார்.

## றஹீமிய்யா அணி வெற்றி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



வரிப்பத்தான் சேனை மெகா நைட் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டு கழகம் சம்பியனானது.

வரிப்பத்தான்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (09) இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் வரிப்பத்தான்சேனை சி.சி.–மிலான் அணியை எதிர்கொண்ட றஹீமிய்யா அணி 34 ஓட்ட வெற்றி இலக்கை அதிடியாக ஆடி எட்டியது.

## இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராகிறார் இயன் பெல்



எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக இங்கிலாந்து முன்னாள் துடுப்பாட்ட வீரர் இயன் பெல் நியமிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவர் எதிர்வரும் ஓகஸ்ட் 16 ஆம் திகதி தொடக்கம் மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் முடியும் வரை இலங்கை பயிற்சியாளராக செயற்படவுள்ளார். இயன் பெல் இங்கிலாந்து அணிக்காக 118 டெஸ்ட் போட்டிகளில் 7727 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு அவரது ஓட்ட சராசரி 42.69 ஆகும்.

அவர் 22 டெஸ்ட் சதங்களை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து சூழலை வீரர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இயன் பெல் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதற்காக இங்கிலாந்து சென்றிருக்கும் இலங்கை அணி இன்று (14) நான்கு நாள் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது. இரு அணிகளும் ஆடும் முதல் டெஸ்ட் போட்டி ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## செவ்வாய் பாறைகளுக்கு கீழ் திரவ நீர் கண்டுபிடிப்பு



செவ்வாய் கிரகத்தின் பாறை மேற்பரப்புக்கு கீழ் ஆழத்தில் திரவ நீர் தேங்கி இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

செவ்வாயில் 2018 ஆம் ஆண்டு தரையிறங்கிய நாசாவின் இன்சைட் ஆய்வு இயந்திரத்தில் இருந்து பெறப்பட்ட புதிய தரவு ஒன்றின் மூலமே இந்த கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. செவ்வாயில் ஏற்படும் பூகம்பத்தின் அதிர்வுகளை இன்சைட் நான்கு ஆண்டுகளாக பதிவு செய்து வந்தது.

இந்தக் கிரகத்தின் நகர்வுகள் தொடர்பில் இந்த அதிர்வுகளை கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு அதில் திரவ நீர் இருப்பதற்கான 'நில அதிர்வு சமிக்ஞைகள்' கிடைத்துள்ளன.

செவ்வாயின் துருவங்களில் உறைந்த நீர் இருப்பது மற்றும் வளிமண்டலத்தில் நீராவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அந்தக் கிரகத்தில் திரவ நீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்முறையாகும்.

இந்தக் கண்டுபிடிப்பு தொடர்பான விபரம் அமெரிக்காவின் விஞ்ஞான சஞ்சிகை ஒன்றில் வெளியாகியுள்ளது.

நான்கு ஆண்டுகளாக செவ்வாயின் அதிர்வுகளை பதிவிட்டு வந்த இன்சைட் ஆய்வு இயந்திரம் அதன் ஆய்வுத் திட்டங்களை 2022 டிசம்பரில் நிறைவு செய்தது. இந்தக் காலப்பகுதியில் 1,319க்கும் அதிகமான பூகம்பங்களை அது செவ்வாயில் பதிவு செய்துள்ளது.

நில அதிர்வு அலைகள் எவ்வளவு வேகமாகப் பயணித்துள்ளன என்பதை அளப்பதன் மூலம், அவை எந்தப் பொருளின் ஊடாகச் செல்லும் வாய்ப்பு அதிகம் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

'பூமியில் நம் நிலப்பரப்புகளில் தண்ணீர் அல்லது எண்ணெய் மற்றும் எரிவாயுவின் இருப்பைத் தேடுவதற்கு நாம் பயன்படுத்தும் அதே நுட்பம் இது' என்று ஆராய்ச்சியில் ஈடுபட்ட பெர்க்லியின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மைக்கேல் மங்கா விளக்கினார்.

செவ்வாய் கிரகத்தின் மோலோட்டில் சுமார் 10 முதல் 20 கி.மீ. ஆழத்தில் நீர்த்தேக்கங்கள் இருப்பதை ஆய்வு வெளிப்படுத்தியது.

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பு பற்றிய இந்த ஆய்வுகள், அதன் நிலப்பரப்பில் இருக்கும் கால்வாய்கள் மற்றும் சிற்றலைகள் பண்டைய காலங்களில், கிரகத்தில் ஆறுகள் மற்றும் ஏரிகள் இருந்திருக்கும் சுவடுகளை பிரதிபலிக்கின்றன.

ஆனால் 300 கோடி ஆண்டுகளாக செவ்வாய் கிரகம் பாலைவனமாகவே உள்ளது.

செவ்வாய் கிரகம் அதன் வளிமண்டலத்தை இழந்த போது அதன் நீர் இருப்புகளில் சில விண்வெளிக்கு சென்றது. ஆனால், பேராசிரியர் மங்கா, இங்கே பூமியில், 'நம்முடைய தண்ணீரின் பெரும்பகுதி நிலத்தடியில் உள்ளது, செவ்வாய் கிரகத்திலும் அப்படி இருக்கலாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# பிராந்திய போர் பதற்றத்திற்கு மத்தியில் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்

## ஐரோப்பிய நாடுகளின் அழைப்பை நிராகரித்தது ஈரான்

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கும் பிராந்தியத்தில் போர் பதற்றத்தை தணிப்பதற்கும் சர்வதேச முயற்சிகள் நீடித்துவரும் நிலையில் இஸ்ரேல் காசா மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு மேற்குக் கரையிலும் அதன் சுற்றிவளைப்புகள் இடம்பெற்று வருகின்றன.

காசாவின் தெற்கில் உள்ள மிகப்பெரிய நகரான கான் யூனிஸில் இருந்து இஸ்ரேலின் உத்தரவை அடுத்து ஆயிரக்கணக்காக மக்கள் தொடர்ந்து வெளியேறி வருவதோடு அங்கு இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களும் நீடித்து வருகின்றன.

கான் யூனிஸின் கிழக்கே உள்ள வீடு ஒன்றின் மீது கடந்த திங்கட்கிழமை (12) இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அபசான் சிறு நகரில் இருக்கும் அபூ ஹய்யா குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டின் மீதே தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் இரு சிறுவர்கள் உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போரில் கடந்த 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 40,000ஐ நெருங்கி இருப்பதோடு 92,000 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 32 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 88 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,929 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 92,240 பேர் காயமடைந்துள்ளனர்.

காசா போரையொட்டி இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் பதற்றம் நீடிப்பதோடு கைது செய்யப்பட்டிருக்கும் பலஸ்தீன சந்தேக நபர்களில் வீடுகளை இடித்துத் தகர்க்கும் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இஸ்ரேலியப் படை நேற்று மேலும் ஒரு பலஸ்தீனர் ஒருவரை சுட்டுக் கொன்றதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இதன்போது துப்பாக்கிச் சூடு மற்றும் கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தை மேற்கொண்ட இஸ்ரேலியப் படை இளைஞர் ஒருவரின் நெஞ்சில் சுட்டதாக அந்த செய்தி குறிப்பிடுகிறது.

இஸ்ரேல் மீதான தாக்குதல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் பலஸ்தீன சந்தேக நபர்களின் வீடுகளை தகர்க்கும் நடவடிக்கையை இஸ்ரேல் வழக்கமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசா போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புகள் அல்லது குடியேறிகளின் தாக்குதல்களில் இதுவரை குறைந்தது 619 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். இதே காலப்பகுதியில் பலஸ்தீனர்களின் தாக்குதல்களில் படையினர் உட்பட குறைந்தது 18 இஸ்ரேலியர் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய உத்தியோகபூர்வ தரவுகள் காட்டுகின்றன.

காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் அங்கு போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் புதிய சுற்று பேச்சுவார்த்தையை நாளை (15) ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்தம் வகிக்கும் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து திட்டமிட்டபோதும் அந்தப் பேச்சுவார்த்தை தொடர்பில் இன்னும் உறுதியான முடிவு ஒன்று எட்டப்படவில்லை.

காசாவில் தொடர்ந்து 100க்கும் அதிகமான இஸ்ரேலிய பணயக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுவதோடு அவர்களை விடுவிப்பதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உள்நாட்டில் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் இரு வெள;வேறு சம்பங்களில் இஸ்ரேலிய ஆண் பணயக்கைதி ஒருவர் அவரது காவலரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் மேலும் இரு பெண் பணயக்கைதிகள் படுகாயத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் ஹமாஸ் ஆயுதப் பிரிவு பேச்சாளர் அபூ உபைதா தெரிவித்துள்ளார். இதற்கு இஸ்ரேலே பொறுப்பேற்க வேண்டும் என்றும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காசா நகரில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை நடத்திய வான் தாக்குதலில் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்தனர். இந்த சம்பவம் குறித்து பேச ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று கூடியது. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் அல்ஜீரியா விடுத்த அழைப்பை அடுத்தே இந்த அவசரக் கூட்டம் நடந்தது.

இதேவேளை ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே டெஹ்ரான் நகரில் படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேலுக்கு எதிராக பழிதீர்ப்பதில் ஈரான் உறுதியாக உள்ளது. இந்நிலையில் அமைதிகாக்கும்படி பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் பிரிட்டன் விடுத்த அழைப்பை நிராகரித்த ஈரான், அந்த அழைப்பு போதிய அரசியல் தர்க்கம் இல்லாததும் சர்வதேச சட்டத்தின் கொள்கைகளுக்கு முரணாகவும் இருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த மூன்று நாடுகளும் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில், இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலில் இருந்து ஈரான் மற்றும் கூட்டணிகள் அமைதிகாக்க வேண்டும் என்றும் அவ்வாறான தாக்குதல் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்து காசா போர் நிறுத்தத்திற்கான வாய்ப்பை சீர்குலைக்கச் செய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

போர் பதற்றத்திற்கு மத்தியில் அமெரிக்கா தனது போர் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பலை பிராந்தியத்திற்கு அனுப்பியுள்ளது. இந்த வாரத்தில் கூடிய விரைவில் ஈரான் அல்லது அதன் ஆதரவுப் படைகளால் குறிப்பிடத்தக்க தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என்றும் அதற்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன் கிர்பி நேற்று முன்தினம் (12) குறிப்பிட்டிருந்தார்.

'(தாக்குதலுக்கான) சாத்தியமான காலம் தொடர்பில் இஸ்ரேலிய சாகக்களின் அதே கவலை மற்றும் எதிர்பார்ப்பை நாம் பகிர்ந்து கொள்கிறோம். அது இந்த வாரமாக இருக்கக் கூடும். குறிப்பிடத்தக்க தாக்குதலுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும்' என்று கிர்பி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள கோலன் குன்றில் இடம்பெற்ற ஏவுகணை தாக்குதலில் 12 இளைஞர்கள் கொல்லப்பட்டது, அதனைத் தொடர்ந்து பெய்ரூட்டில் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் முன்னணி தளபதி ஒருவர் கொல்லப்பட்டு மற்றும் ஹனியேவில் படுகொலை சம்பங்களை அடுத்து இஸ்ரேல் கடந்த மாதம் தொடக்கம் பதில் தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்து உள்ளது.

'அவர்களுக்கு (இஸ்ரேல்) என்ன வந்தாலும் தொடர்ந்தும் நாம் அவர்களுக்கு உதவுவதோடு அவர்களை பாதுகாப்போம்' என்று கிர்பி குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**2025ஆம் வருடத்திற்கான சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குவதற்கான கேள்வி**

01. பின்வரும் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை விபரங்கள் | | விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| **சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்** | | | |
| Q 002 (25SR2)/24 | ETO - Gas air ways-anesthesia – I (ETO gas can v 170,air ways size 2,3,4 ) | Lot | 29.08.2024 |
| Q 004 (25SR2)/24 | Syringes Terumo – anesthesia – III (Disposable syringe with needle 1cc, 3cc) | Lot | |
| Q 005 (25SR2)/24 | Disposable – IV Needle anesthesia – IV (Disposable IV needles 18G, 18G, 20G ,21G, 22G ) | Lot | |
| Q 006 (25SR2)/24 | E .T. Tube reinforced with stylet anesthesia – V (E.T. Tube flexible 7, 7.5, 8 and introducer stylet size 2,5 ) | Lot | |
| Q 007 (25SR2)/24 | E . T. Tube Non Cuff anesthesia – VI (E.T. Tubes non cuff 2.5, 3, 3.5, 4, 4.5 ) | Lot | |
| Q 008 (25SR2)/24 | E . T. Tube with Cuff anesthesia VII ( E.T. Tube with cuff 5, 5.5, 6, 6.5, 7 ) | Lot | |
| Q 009 (25SR2)/24 | Filters & Masks anesthesia – VIII ( Closed suction catheter, Epidural set complete, Face masko2 A, O2-Peaditric, HME Filter -A) | Lot | |
| Q 010 (25SR2)/24 | NG Tubes – anesthesia – IX ( NG Tube size 12, 14, 16, 18, 10 ) | Lot | |
| Q 011 (25SR2)/24 | Pressure Monitoring & Other Items for anesthesia – X (Insulated needle, O2 nasal cannula –A, PRESSURE MONITORING KIT –D & S, Lines ) | Lot | |
| Q 014 (25SR2)/24 | Suction Catheters anesthesia – XIII (Suction catheter 8FG, 10FG, 12FG, 14FG, 16FG ) | Lot | |
| Q 015 (25SR2)/24 | Anesthesia – XIV (Tree way tap & ext line, respirometer, sucker handle, triple lumen HD, Venture-a kit with tubing ) | Lot | |

முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை வைத்தியசாலையின் வழங்கல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது பின்வரும் இணையுதள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இணைப்பு: https://sjgh.health.gov.lk/tenders.php. மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலையின் வழங்கல்கள் அதிகாரி - மருத்துவம் அவர்களைத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 0112778624, 0112778610 - நீடிப்பு 3143

02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களில் மற்றும் தரப்பட்டுள்ள விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம் அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் மேற்கூறிய திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,
தலபத்பிட்டிய,
நுகேகொடை.**



# வரையறுக்கப்பட்ட ஹோமாகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளான வ/ப ஹோமாகம ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின்,

| | | |
|---|---|---|
| 01. கொட்டாவ | 02. பொல்கஸ்ஓவிட்ட | 03. மீகொட |
| 04. ஹபரகட | 05. கிரிவத்துடுவ | 06. ஹோமாகம |
| 07. சித்தமுல்ல | 08. மேற்கு கஹதுடுவ | 09. மத்தேகொட |
| 10. எக்மல்கம | 11. கொட்டாவ நாற்சந்தி | 12. கிழக்கு கஹதுடுவ |
| 13. மேற்கு ஹொரகல | 14. பிட்டிபன தெற்கு | 15. ஆட்டிகல |
| 16. கொட்டாவ கல்லூரி சந்தி | 17. ஹிரிபிட்டிய | 18. போரெகெதர |
| 19. தொலஹேன | 20. மாகம்மன | |

ஆகிய கிராமிய வங்கிகளில் 2022.12.31 வரை அடகுவைக்கப்பட்டு, 2024.08.30 வரை மீட்கப்படாத அடகுப்பொருட்கள் 2024.09.01 மு.ப.09.00 முதல் ஹோமாகம கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,
வ/ப ஹோமாகம ப.நோ.கூ.சங்கம்,
இல.57, ஹைலெவல் வீதி,
ஹோமாகம.**

**தொ.பே. 0112855291, 0112892057, 0114374794**

# விலை விபரங்களைக் கோரல் EPSON PLQ 35 கணனி அச்சு இயந்திரம்

EPSON PLQ 35 கணனி அச்சு இயந்திரங்கள் 05ஐ வழங்குவதற்காக உங்கள் நிறுவனத்தின் விலை விபரங்கள் மற்றும் பராமரிப்பின் பின்னரான சேவை வழங்கும் வசதிகள் பற்றிய தகவல்களை 2024.08.28ம் திகதிக்கு முன்பு அனுப்புங்கள் விபரங்களை அனுப்ப வேண்டிய முகவரி :-

**தலைவர், 37/36, பன்சல வீதி, கொழும்பு - 10**

மின்னஞ்சல் முகவரி :
**sechdts@gmail.com**

# அறிவித்தல்

**எய்ட்கன் ஸ்பென்ஸ் பிளான்டேஷன் மெனேஜ்மென்ட்ஸ் பிஎல்சி
(கம்பனிப்பதிவு இல. PB 1196 PQ)
35 வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி அரச வர்த்தமானி இல. 1215/2 இல் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) 53 ஆவது பிரிவின் கீழ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 5(d) இன் அடிப்படையில் எய்ட்கன் ஸ்பென்ஸ் பிளான்டேஷன் மெனேஜ்மென்ட்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பங்குதாரர்களின் அதிவிசேட பொதுக் கூட்டம் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதியன்று நடைபெற்றதோடு, பின்வரும் தீர்மானங்கள் அக் கூட்டத்தில் கலந்துகொண்ட பங்குதாரர்களில் எழுபத்தைந்து சதவீதத்திற்கு (75%) குறையாதோரால் நிறைவேற்றப்பட்டன எனும் விவரம் **இத்தால் அறிவிக்கப்படுகிறது.**

“கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து கம்பனியின் பங்குகள் நீக்கப்படும் என **இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.**

அத்துடன் கம்பனியில் உள்ள தமது பங்குகளை விலக்கிக்கொள்ள விரும்பும் பங்குதாரர்களிடமிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு பிரதான பங்குதாரர்கள் நிர்ணயித்துள்ள விலையான பங்கொன்றுக்கு இருநூற்று நாற்பது இலங்கை ரூபாய்கள் (LKR 240) எனும் விலையானது அங்கீகரிக்கப்படுவதாக **இத்தால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.**

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி அரச வர்த்தமானி இல. 1215/2 இல் வெளியிடப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2001 ஒழுங்குவிதிகளின் படி கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து கம்பனியின் பங்குகளை நீக்குவதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான தத்துவம் கம்பனியின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுவதாக இத்தால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது”.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி

**எய்ட்கன் ஸ்பென்ஸ் பிளான்டேஷன் மெனேஜ்மென்ட்ஸ் பிஎல்சி**

**எய்ட்கன் ஸ்பென்ஸ் கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடட்**

**செயலாளர்கள்**

2024 ஆகஸ்ட் 14

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெறுகை அறிவித்தல்

## விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் வடமத்திய மாகாண சபை

1. பின்வரும் திட்டங்களின் அமுல்படுத்தல்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வடமத்திய மாகாண சபை - விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் / பணிப்பாளர் இப்போது அழைக்கின்றார்.

| தொ. இல. | பெறுகை இல. | திட்டம் | பொறியியல் மதிப்பீடு (வெட் இன்றி BOQ தொகை) | CIDA பதிவு | நிர்மாணக் காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2024/DOAPH/NCB/CON/WF/01 | திரப்பனே விலங்குப் பண்ணையில் குஞ்சி பொறிப்பக கட்டிடத்தின் நிர்மாணம் | 24.10 | C5 அல்லது C6 | 90 நாட்கள் | 245,000.00 | 119 நாட்கள் (2024-12-09ஆம் திகதி வரை) | 5,000.00 |
| 2. | 2024/DOAPH/NCB/CON/LM/02 | திரப்பனே விலங்குப் பண்ணையில் சஹிவல் கால்நடை கொட்டகையின் நிர்மாணம் | 8.30 | C6 அல்லது C7 | 90 நாட்கள் | 85,000.00 | 119 நாட்கள் (2024-12-09ஆம் திகதி வரை) | 3,000.00 |
| 3. | 2024/DOAPH/NCB/CON/PC/03 | திரப்பனே விலங்குப் பண்ணையில் பன்றிக் கொட்டகையின் நிர்மாணம் | 5.58 | C6 அல்லது C7 | 90 நாட்கள் | 60,000.00 | 119 நாட்கள் (2024-12-09ஆம் திகதி வரை) | 3,000.00 |
| 4. | 2024/DOAPH/NCB/CON/PC/04 | பொலன்னறுவையில் மாவட்ட கால்நடை மருத்துவமனையின் திருத்தவேலைகள் | 6.30 | C6 அல்லது C7 | 90 நாட்கள் | 65,000.00 | 119 நாட்கள் (2024-12-09ஆம் திகதி வரை) | 3,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் (NCB) ஊடாக இடம்பெறும். எவ்வாறாயினும் வடமத்திய மாகாண நிர்வாக எல்லைகளுக்குள் பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அனுராதபுரம், கொடகே மாவத்தையில் அமைந்துள்ள வடமத்திய மாகாணம் - விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்பிலக்கம்: 0252225337)

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-08-14ஆம் திகதி முதல் 2024-09-02ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   **விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
   வடமத்திய மாகாணம்,
   கொடகே மாவத்தை,
   அனுராதபுரம்.**

5. ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ என இரு பிரதிகளாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ஒரு கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயர் மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-09-03ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘பணிப்பாளர் / தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், வடமத்திய மாகாணம், கொடகே மாவத்தை, அனுராதபுரம்’’ எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024-09-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

6. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட 2024-12-10ஆம் திகதி வரை செல்லுபடியாகும், மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   **பணிப்பாளரின் அலுவலக அறை,
   விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
   வடமத்திய மாகாண சபை,
   கொடகே மாவத்தை,
   அனுராதபுரம்.**

7. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-21ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்பதுடன் ஆர்வமுள்ள தரப்பினர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**பணிப்பாளர்/ தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
வடமத்திய மாகாண சபை,
கொடகே மாவத்தை,
அனுராதபுரம்.**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

DRP

# விலைமனுக்கோரல் (IFB)

**கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம், நிறுவல், செயல்படுத்தல், மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை.**

**IFB No: DRP/ACC/07/01/2024 - II**

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு **கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம்,நிறுவல், செயல்படுத்தல், மற்றும்** பராமரிப்பதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB).

03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் 0115226172 மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப்பிரிவில், **“சி” பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் (**www.drp.gov.lk**). மூலமாக **2024.08.14** முதல் **2024.09.09** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.08.14** ஆம் திகதியிலிருந்து **2024.09.09** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் “சி” பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாய் (ரூ.5,000.00)** மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்) 2024.09.10** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், “சி” பகுதி, 12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. மனு தொடர்பான கூட்டம் **2024.08.21 ஆம் திகதி** பி.ப 2.00 மணிக்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், “சி” பகுதி, **13ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** இடம்பெறும்.

07. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் (240,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தலைவர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,
12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.**

SELACINE

# இலங்கை தேசிய வைத்தியசாலை
# கொழும்பு-10.

## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றுவதற்காக ICTAD இல் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2024.08.14 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து 2024.09.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் விலைமனு படிவ மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500/4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது நிருவாக அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கையேற்கப்படலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2024.09.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்த வேளையில் சமுகமளிக்கலாம்.

| வேலை | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு ரூபா சதம் | தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை ரூபா சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 23 ஆம் இலக்க வார்டில் மருத்துவ அலுவலர்களுக்கான கடமை அறை மற்றும் கழிவறை ஆகியவற்றின் நிர்மாணம் (AC-1/47/2024) | 3,893,912.50 | விஷேடத்துவம்: கட்டுமானம் தரம்: சி8 மற்றும் சி7 | 58,400.00 | 2,500.00 |
| Construction of canopy roof supplying, fixing aluminium deco mesh and refurbishment drain of ward No. 17 (AC-1/15/2024) | 4,733,259.00 | விஷேடத்துவம்: கட்டுமானம் தரம்: சி8 மற்றும் சி7 | 75,000.00 | 2,500.00 |

**மருத்துவ கலாநிதி டபிள்யு.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர், பெறுகைக் குழு**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு-10.**

# புலத்சிங்கள பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

1. புலத்சிங்கள பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள திட்டத்தை மேற்கொள்வதற்கு தேசிய போட்டிரீதியான விலைமனு கோரல் அடிப்படையில் CIDA பதிவைக் கொண்ட விலைமனுதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| திட்ட இலக்கம் | திட்டப் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) வெட் இன்றி | ஒப்பந்தப் பதிவு | ஒப்பந்தக் காலம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| S248152446001 | புலத்சிங்கள பிரதேச சபைக்கு சொந்தமான ஹல்வத்துர கொன்கஸ்தென்ன கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள உடைந்த சமுர்தி பாலத்திற்கு பதில் புதிய பாலத்தை நிர்மாணித்தல் | 9,400,013.73 | C6, C7 | 80 நாட்கள் | மாகாண அபிவிருத்தி நிதி |

2. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3000.00 ரூபா படிவக் கட்டணத்தை செலுத்தி 2024.08.14 ஆம் திகதி தொடக்கம் 2024.08.27 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை புலத்சிங்கள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் குறித்த விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியும். (தொலைபேசி இலக்கம் 0342283175)
3. விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது 235,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்க முடியுமான வங்கி அல்லது காப்புறுதி நிறுவனத்தின் 470,000.00 ரூபா பெறுமதிக்கு 106 நாட்களுக்கு பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை புலத்சிங்கள பிரதேச சபையின் செயலாளரின் பெயருக்கு வழங்குதல் வேண்டும்.
4. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக உறைகளில் இட்டு மீண்டும் அந்த இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு முத்திரையிட்டு அந்த உறைகளின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரை குறிப்பிட்டு 2024.08.27 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்குமாறு "செயலாளர், பிரதேச சபை, புலத்சிங்கள" என்ற முகவரிக்கு கொண்டுவந்து விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
5. தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் அந்த சந்தர்ப்பத்திற்கு வருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

**லலித் தீபிகா உடுமுல்ல,**
**செயலாளர் மற்றும் புலத்சிங்கள பிரதேச சபையின்**
**அதிகாரங்கள், பணிகள், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை,**
**புலத்சிங்கள**
**2024.08.14**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### அதிகார சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான – பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரல் – 2024/2025

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான - பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கி |
| PRDA/WP/PRO/ 2024 /53 | மோட்டார் சைக்கிள், இலகு வாகனம், கனரக வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்கான - பெட்டகம் மற்றும் வீதிகளுக்கிடையிலான நிதி சார்பாக காப்புறுதி காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல் | ரூ.1000.00 18% (வெட்)+SSCL 2.5% | ரூ. 25,000.00 | ரூ.50,000.00 |

**கேள்வி விநியோகித்தல்**

இதற்கான கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூ.1000.00+ 18% வெட்+SSCL 2.5% படிவக் கட்டணத்தைச் செலுத்தி 2024.08.14 முதல் 2024.08.27 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை இவ் அலுவலகத்தின் பெறுகைப் பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு காப்புறுதி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க முடிவது ஒரு கேள்விக்காக மட்டுமே.

**கேள்விகளை ஏற்றுக்கொள்ளல்/திறத்தல்**

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் உள்ள இடத்தின் இரண்டாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.08.28 பி.ப.2.30 இற்கு முன்பு இடலாம் அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம். (கடித உறையின் மேல் மூலையின் இடதுபக்கம் "இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை காப்புறுதி செய்தல்" என்று குறிப்பிடுதல் (வேண்டும்)

இப்பெறுகைக்கு தகைமை பெறுவதற்கு ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக கேள்விதாரரால் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்பட்ட பதிவுச்சான்றிதழை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்**
